குருகுலம்

மலர் 2

இதழ் 9 10

கோவை வள்ளல், மோட்டார் மன்னர்,
உயர்திருவினர்.
G. D. நாயுடு அவர்கள்

திங்கள்)   வாலாஜாபாத்   (

PAR

அரிவையர்

அழகுக்கு

அழகு செய்யும்

அரிய

நகைகள்



P. A. ராஜு செட்டியார் & பிரதர்

போன்: 268 — கோயமுத்தூர் — தந்தி: ராஜா

ஓம்.

வள்ளலார் இல்லத்துக் கட்டிடத்தின் தரைப்படம் (பிளான்)



வள்ளலார் இல்லத்தில் இன்று 550 குழந்தைகள் உள்ளனர். அவர்கள் தங்குவதற்கும் உண்பதற்குமாக 4கட்டிடங்கள் தேவையாயுள்ளன. அவற்றில் ஒன்று கட்டத் தொடங்கியுள்ளோம். அரசியலார் அதற்கு ஒப்புதல் கொடுத்து அதன் செலவிலும் ஒரு பாதியை ஏற்றுக்கொள்ள இசைந்திருக்கிறார்கள். 8 பகுதிகளாக உள்ள அதன் செலவு மொத்தம் ரூ. 32,000. எனவே ஒவ்வொரு அறைக்காகவும் நாம் செலவிடவேண்டிய தொகை ரூ. 2000 இவ் உதவியைப் பொதுமக்களிடமிருந்தே எதிர்பார்க்கிறோம். பணமும் மனமும் படைத்தவர்கள் உதவிபுரியக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மாணவர் இல்லம் கட்டுகிறோம்
மனமுவந்து உதவி செய்யுங்கள்.

வாலாஜாபாத் இந்துமத பாடசாலை 34 ஆண்டுகளாக நம் தாய் நாட்டின் குழந்தைகளுக்குத் தொண்டுபுரிந்துவருகிறது. பாடசாலையில் இன்று 750 குழந்தைகள் படித்துக்கொண்டு வருகின்றனர். அதன் சார்பிலுள்ள வள்ளலார் மாணவர் இல்லத்தில் 550 குழந்தைகள் நாட்டின் பல இடங்களிலிருந்துவந்து உணவும், இடமும் பெறுவதோடு ஒழுக்கமும் கற்றுவருகின்றனர்.

பாடசாலைக்குப் புதுக்கட்டிடமொன்று சென்ற ஆண்டு கட்டத் தொடங்கினேம். எட்டு வகுப்பறைகள் உள்ள ஒரு பகுதி கட்டி முடிந்தது. அரசியலாரும், பொதுமக்களும், அதற்கு உதவிபுரிந்தனர். உதவிபுரிந்த எல்லாருக்கும் நன்றியும், வணக்கமும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மாணவர் இல்லத்திற்கு இதுவரையில் நல்ல கட்டிடங்கள் கட்டப்பெறவில்லை. அதற்காக வசதியான கட்டிடங்கள் குறைந்த செலவில் கட்டுவதெனத் தீர்மானித்துள்ளோம். இப்பொழுது உள்ள மாணவர்களுக்குப்போதுமான அளவு 4 கட்டிடங்கள் கட்டவேண்டும். அவற்றில் ஒன்றினுடைய படம் இதன் பின்பக்கம் உள்ளது. இதன் செலவு ரூ. 32,000. இதை அரசியலாரும் ஒப்புக்கொண்டுள்ளனர். 8 பகுதிகளாக இது பிரிக்கப்பட்டு உள்ளது. ஒவ்வொரு பகுதிக்கும் செலவு ரூபாய் 4000 பிடிக்கிறது. அதில் அரசியலார் உதவிபோக ரூ. 2000த்தைப் பொதுமக்களிடம் எதிர்பார்க்கிறோம்.

ரூபாய். 2,000 கொடுப்பவர்களுடைய திருவுருவப் படத்துடன்; வாழ்க்கைக் குறிப்புகளையும் ஒவ்வொரு அறையிலும் கல்லில் எழுதிவைத்துப்போற்றுவோம். பொருளுள்ள பெருமக்கள் நேரில்வந்து பாடசாலையையும், மாணவர்இல்லத்தையும் பார்வையிட்டு உதவிபுரிவதோடு எங்களை மேன்மேல் ஊக்கி அருளவும் வேண்டுகிறோம்.

தங்கள் பணிவுள்ள,

வாலாஜாபாத் இந்துமத பாடசாலையார்.

"குருகுலம்"

வாலாஜாபாத்
இந்துமத பாடசாலை
(திங்கள் வெளியீடு)

ஆசிரியர்:
நா. ப. தணிகை அரசு

திருவள்ளுவர் ஆண்டு ௧௯அம
புரட்டாசி, ஐப்பசி.
மலர் 2] [இதழ் 9, 10

உட்பொருள்

1	உயிர் இரக்கம் ஏன்?	2
2	அட்டைப்படவிளக்கம்	5
3	இயல்வதுகரவேல்	9
4	இலண்டன் பல்கலைக் கழகம்	12
5	சிறை இல்லாத நாடு	15
6	விளையும் பயிர்	18
7	மேட்டூர் அணைக்கட்டு	22
8	குருகுல நிகழ்ச்சிகள்	25

'குருகுலம்'

திங்கள் இதழ்	0 3 0
ஆண்டுக் கட்டணம்	2 0 0
3 ஆண்டுக் கட்டணம்	5 0 0
ஆயுள் கட்டணம்	25 0 0
விளம்பரம் அட்டை வெளிப்பக்கம்	100 0 0
அட்டை உட்பக்கம்	75 0 0
இதழுக்குள் முழுப் பக்கம்	50 0 0
அரைப் பக்கம்	25 0 0

சிறுவர்களுக்கான
[சி]றுகதைப்புத்தகங்கள்

குழந்தைக் கவிஞர்
அழ. வள்ளியப்பா
எழுதியவை.

[1]	பாட்டிக்குப் போட்டி	0 4 0
[2]	நல்ல நண்பர்கள்	0 2 0
[3]	கட்டைவிரல் கிட்டு	0 2 0
4	குதிரைச் சவாரி சீதா எழுதியது	0 2 0
5	மனோஹரன் ராஜன் எழுதியது	0 2 0
6	மகேந்திர ஜாலம் வலம்புரி சோமநாதன் எழுதியது	0 2 0
7	ராணி பேசினாள் அகிலன் எழுதியது	0 2 0
[8]	கண்ணான கண்ணன்	0 2 0

கிடைக்குமிடம்:—

குழந்தைப் பதிப்பகம்
4, ரட்லண்ட் கேட் காலனி
சென்னை 6.

உயிர் இரக்கம் ஏன் ?

உலகில் பலவகையான பொருள்கள் இருக்கின்றன. அவைகளை அறிவுள்ள பொருள்கள் என்றும் அறிவில்லாத பொருள்கள் என்றும் இருவகைகளாகப் பிரிக்கலாம்.

அறிவுள்ள பொருள்கள் மக்கள், விலங்குகள், பறவைகள் முதலியன. அறிவில்லாத பொருள்கள் கல், மண், நீர் முதலியன.

அறிவில்லாத பொருள்களுக்கு உயிர் இல்லை. அறிவுள்ள பொருள்களுக்கு உயிர் உண்டு. உயிரை நாம் கண்ணால் பார்க்க முடிவதில்லை. அஃது இருக்கும் உடம்புகளைக் கொண்டு தான் அதன் இருப்பை உணர்கிறோம். மக்கள் உடம்பைப் பார்க்கிறோம். அதற்குள் உயிர் இருப்பதைத் தெரிந்து கொள்ளுகிறோம். யானையின் உடம்பைப் பார்க்கிறோம். அதனுள் உயிர் இருப்பதைத் தெரிந்து கொள்ளுகிறோம். கிளியொன்றன் உடம்பைப் பார்க்கிறோம். அதனுள் உயிர் இருப்பதைத் தெரிந்து கொள்ளுகிறோம்.

உயிரின் அறிவு அஃது இருக்கும் உடம்பால் வெளிப்படுகின்றது- எல்லா உயிர்களுக்கும் அறிவு உண்டு. ஆனால் எல்லா உயிர்களின் அறிவும் ஒத்தில்லை. வெவ்வேறு வகையாகவும் அளவாகவும் இருக்கிறது. அதற்குக் காரணம் என்ன?

நாம் செம்பைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். செம்பை விளக்கி வைத்தால் பளபள வென்றிருக்கிறது. ஆனால் எப்பொழுதும் அஃது அவ்வாறு இருப்பதில்லை. களிம்பு அதில் வந்துவிடுகிறது. செம்போடு களிம்பு இயற்கையாகவே உள்ளது. நாம் எவ்வளவு முயற்சியாக வைத்திக்கிறோமோ அந்த அளவுக்கு அது களிம்பிலிருந்து விடுபட்டிருக்கும்.

உயிரையும் ஒரு பொருள் மூடிக்கொண்டிருக்கிறது. மலம் என்று அதற்குப் பெயர். மலம் மூடியிருக்கும் போது உயிர்க்கு அறிவு விளங்குவதில்லை. மலம் விலகினால் உயிர் அறிவு விளங்கும். மலம் சிறிது சிறிதாக நீங்குகிறது. உயிர் அறிவும் சிறிது சிறிதாக விளக்கம் பெறுகிறது. மலம் நீக்கம் மிகுதியாகவுடைய உயிர்கள் மிகுந்த அறிவுடையவைகளாகவும் விளக்கமுடையவைகளாகவும் உள்ளன. மலம் நீக்கம் குறைவாகவுடைய உயிர்கள் குறைந்த அறிவுடையவைகளாகவும் குறைந்த விளக்கமுடையவைகளாகவும் உள்ளன.

எனவே எல்லா மக்களும் அறிவில் ஒத்திராமல் ஏற்றத் தாழ்வுடையவர்களாகவே உள்ளனர்.

இதனால் மற்றொன்றும் தெளிவாகின்றது. 'இன்று அறிவிற் சிறந்து விளங்குபவர்களும் ஒரு காலத்தில் அறிவில்லாது இருந்தவர்கள். இன்று அறிவில் தாழ்ந்துள்ளவர்களும் ஒரு காலத்தில் அறிவிற் சிறந்து விளங்குவார்கள்' என்பது இதனால் தெரிகின்றது.

எனவே ஒருவன் இன்னொருவனை இகழ்வது தவறு. குறைவாக நினைப்பது தவறு. தன்னை மற்றவர்களைவிட உயர்வாக எண்ணிக்கொள்ளுவதும் தவறு.

நாம் நம்மினும் தாழ்ந்த நிலையிலுள்ள உயிர்களைப் பார்க்கும்போது அவைகளுக்காக இரக்கப்படவேண்டும். நம்மைப் பற்றி எண்ணும்போது நமக்கு மலநீக்கத்தை அருள் செய்த ஆண்டவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். இவ்வாறு மற்ற உயிர்களிடம் காட்டும் இரக்கத்தையே 'உயிர் இரக்கம்' அல்லது 'ஜீவகாருண்ணியம்' என்று பெரியோர்கள் கூறுகின்றனர்.

அண்ணன் படித்திருக்கிறான். நல்ல பதவியிலும் அமர்ந்திருக்கிறான். நிரம்பப் பொருளும்பெறுகிறான். தம்பி படிக்கவில்லை. படிக்க முயன்றும் அவனால் முடியவில்லை. அறிவும் அவனுக்குக் குறைந்தே உள்ளது. பொருள் சேர்க்கவும் அவனுக்குத் தெரியவில்லை. அந்தத் தம்பியிடம் தமையன் இரக்கம் காட்டுவான். இரக்கங் காட்டாது அவனை இகழ்ந்துரைப்பானா? இழிவாக நடத்துவானா? நடத்தினால் நாம் அவனை இகழமாட்டோமா?

எல்லா உயிர்களும் ஒரே ஆண்டவனின் மக்கள். அருள்வடிவமான அத்தெய்வத் தந்தையார் யாவற்றையும் படைக்கிறார்; பின்னர் காக்கிறார்; எல்லா உயிர்களிடத்தும் ஒத்த அன்பு காட்டுகிறார் என்றாலும் எல்லா உயிர்களும் ஒரே தன்மையவாக இல்லை. அவைகளின் அறிவு நிலைகளும், பிறவும் வேற்றுமையுள்ளவையாகவே காணப்படுகின்றன.

இந்நிலையை எண்ணிப் பார்த்தால் அறிவிற்சிறந்தவர்கள் அறிவுகுறைந்தவர்களிடம் இரக்கம் காட்டுதல் வேண்டுமென்பது தெளிவாகின்றது. உயிரிரக்கம் வேண்டும். நாம் உயிர்கள்பால் இரக்கம் காட்டினால்தான் ஆண்டவன் நம்பால் இரக்கம் காட்டுவான்.

உலகம் எங்கணும் உயிர் இரக்கம் காணப்பெற வேண்டும். உயிர் இரக்கம் இருந்தால் மக்கள் எல்லாம்

ஒற்றுமையுடன் வாழ முடியும். ஒற்றுமையாயிருந்தால்தான் ஒருவருக்கொருவர் உதவிசெய்யமுடியும். அவ்வாறு உதவியாயிருந்தால்தான் யாரும் துன்பமில்லாத இன்பவாழ்க்கை வாழமுடியும். எல்லாரும் இன்புற்றிருக்கவே பெரியோர்கள் எல்லாரும் நினைக்கிறார்கள்.

இரக்கம் இருக்குமிடத்தில் கொடுமை நிகழாது. நமக்கு ஒரு குழந்தையிடம் இரக்கமிருந்தால் அக்குழந்தைக்கு நன்மை மட்டுமே செய்வோம்; தீமைசெய்யவே மாட்டோம். நம்மினும் சிறியவர் நமக்குத்தீங்கு இழைக்கிறார்கள். அறியாமையால் அவர்கள் தீங்கு புரிகின்றார்கள். அவர்கள்பால் நமக்கு இரக்கம் இருப்பின் அவர்களுக்கு நாம் தீங்கு செய்ய எண்ணுவோமா? நமக்குத் தீங்கு செய்வதனால் அவர்கள் துன்பம் எய்துவார்களே! என்றுவருந்துவோம். அவர்களைத் திருத்தவே முற்படுவோம்.

நமக்கு வலிவிருக்கிறதென்று நம்மினும் வலிகுறைந்தவர்களுக்குத் துன்பம் செய்வோமா? இரக்கம் அவ்வாறு செய்வதைத்தடுக்கும். இரக்க உள்ளமுடையவர் பிற உயிர்களுக்குச் சிறிது கேடும் செய்யமாட்டார்கள்.

உயிர்க்கொலையும் புலைப் புசிப்பும் நடவா. உலகமெல்லாம் இன்புற்றிருக்கும்.

இத்தகைய உயிர் இரக்கம் (ஜீவகாருண்யம்) எங்கும் எப்பொழுதும் வேண்டும் வேண்டும் என்று பெரியோர்களெல்லாம் கூறினர். அவர்களுள் தலை சிறந்தார் இராமலிங்க அடிகளார்.

சென்ற நூற்றாண்டில் நம் செந்தமிழகத்தே தோன்றியருளிய அருள்திரு இராமலிங்க அடிகளாரைப் பலரும் அறிவர். அவர் விரிவாக இயற்றியருளிய அருள் நூலாகிய திருவருட்பாவையும் பலரும் அறிவர். உலகம் முழுமையும் ஒரே கடவுள் வழிபாடு வேண்டும். அதுவும் பேரொளி வழிபாடாக இருத்தல் வேண்டும். மக்களிடம் அறிவுவளர்ச்சிக்கு எல்லாவசதிகளும் வேண்டும். உலகில் பசித்துன்பம் என்பதே தலைகாட்டலாகாது என்றெல்லாம் அறிவுறுத்தியருளினர் அவ்வடிகளார்.

இராமலிங்க அடிகளார் இற்றைக்கு 127 ஆண்டுகளுக்கு முன்தோன்றினர். அவரது பிறந்த நாள் புரட்டாசித் திங்களில் சித்திரைத் திருநாள். அவ் வள்ளலாரின் சிறந்த கருத்துகளை யாவரும் மனத்திலிருத்திச் சிறப்போமாக!

கோவை வள்ளல், மோட்டார் மன்னர்

உயர்திரு. ஜி. டி. நாயுடு அவர்கள்

கோயமுத்தூர் மாவட்டத்தைச்சேர்ந்த கலங்கல் என்னும் சிற்றூரிலே 1893-ஆம் ஆண்டு பிறந்தார் நம் ஜி. டி. நாயுடு அவர்கள். அவரது தந்தையாரின் பெயர் உயர்திரு. கோபால்சாமி நாயுடு. குழந்தை பிறந்த அடுத்த ஆண்டே தாய் இறந்தனர். எனவே குழந்தை பாட்டியார் வீட்டில் வளர்ந்துவந்தது.

இலட்சுமிநாயக்கன்பாளையம் உயர்திரு. இராமசாமி நாயுடு அவர்களுக்கு நம் பெருந்தகையாரை வளர்க்கும் பேறு கிடைத்தது. ஆனால் அவரிடம் சில ஆண்டுகளே இருந்தார். நம் பெருந்தகை அங்கிருந்தபோது ஒரு திண்ணைப்பள்ளிக்கூடத்தில் சேர்ந்து எழுதப்படிக்கக் கற்றுக்கொண்டார். பின்னர் கலங்கலுக்குச் சென்றார்.

உயர்திரு. துரைசாமி நாயுடு (ஜி. டி. நாயுடு) அவர்களுக்கு ஆசிரியரிடம் இருந்து படிக்கவே விருப்பமில்லை. தம் தந்தையாரின் தோட்டத்தில், இயற்கைக் காட்சிகளின் இடையிலே, இருந்து பல நூல்களையும் பல ஆண்டுகள் தாமே பயின்றார். இன்று தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதவும் பேசவும் வல்லவராயுள்ளனர். பெரிய மாநாடுகளில் தலைமை ஏற்றுச் சொற்பொழிவுகள் செய்துள்ளார்.

உயர்திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் செல்லம்மாள் என்பவரைத் தமது இருபதாவது வயதில் திருமணம் செய்து கொண்டனர். அவர்கள் அன்பின் செல்வன் 'கோபாலை'க் கோயமுத்தூர் 'கோபால மாளிகை' க்குச் செல்லுபவர்கள் கண்டு மகிழலாம். தனது தந்தையாரைக் காணவருபவர்களுக்கு விருந்து உபசாரங்கள் செய்வான். அவர்கண்டு பிடித்துள்ள பொறிகளில் சிலவற்றைப்பயன்படுத்திக் கொண்டிருப்பான்.

உயர்திரு. ஜி. டி. நாயுடு அவர்களுக்குத் தொழில் வளர்ச்சியில் மிக்க விருப்பம். புதுப்புதுக் கருவிகள் கண்டு பிடிப்பதில் அளவு கடந்த ஆர்வம். தாம் சிறுவயதினராயிருந்தபோது ஒரு ஐரோப்பியரைப் பார்த்தார். அவர் ஒரு மோட்டார் சைகிளில் வந்தார். அதை முதன் முதலாகப் பார்த்தபோது அதைப் பார்த்து வியந்தார். பிறகு தக்கநேரம் கிடைத்ததும் அதையே விலைகொடுத்து வாங்கிக் கொண்டார். அதனைப் பகுதி பகுதியாகப் பிரித்தார். மறுபடியும் ஒன்று சேர்த்தார். இவ்வாறு அவ்வண்டி எவ்வாறு இயங்குகிறது என்பதைத் தெரிந்து கொண்

டார். அன்று கொண்ட ஆர்வத்தால் இன்று பொறியர்கள் (Engineers) பலரும் வியக்கும் வண்ணம் புதுப்புதுப் பொறிகள் பல செய்து வைத்திருக்கிறார்.

நம் பெரியார் நாயுடு அவர்கள் உண்மையான உழைப்பாலும், கூரிய அறிவாலும் முன்னுக்கு வந்தார். கலங்கலை விட்டு கோயமுத்தூர் வந்தபோது திரு நாயுடு அவர்களுக்கு ஒரு வேலையும் கிடைக்கவில்லை. திங்கள் தோறும் உணவுடன் ஊதியம் மூன்று ரூபாய் பெறுவதென்று ஒப்புக்கொண்டு ஒரு உணவுச்சாலையில் அவர் வேலைக்கு அமர்ந்தார். மூன்று ஆண்டுகள் அவ்வேலை செய்தார். நானூறு ரூபாய்கள் மீதி வைத்திருந்தார். அதைக் கொண்டு பருத்தி வாணிபம் செய்யத் தொடங்கினார். முதலில் ஆக்கமாகத்தென்பட்டது. முடிவில் எல்லாப் பொருள்களும் போய்விட்டன.

கைப்பொருள் இல்லாதபோது உயர்திரு. நாயுடு அவர்கள் திங்கள் ஊதியம் ரூ 12ல் சிங்கா நல்லூரில் வேலைக்கு அமர்ந்தார். கொஞ்சம் பொருள் சேர்ந்தவுடன் திருப்பூரில் ஒரு பஞ்சாலை தொடங்கினார். உலகப் பெரும்போர் (1914—18) நடந்த காலம் அதில் ஒன்றரை இலட்சம் ரூபாய் சேர்த்துவிட்டார். பின்னர் பம்பாயில் சென்று வாணிபம் செய்தார். பொருளெல்லாம் இழந்துவிட்டார்.

திரு. நாயுடு அவர்கள் மீண்டும் கோயமுத்தூர் வந்தார். சர் ராபர்ட் ஸ்டேன்ஸ் அவர்களிடம் அறிவுரை கேட்டார் 1920ம் ஆண்டில் ஒரு மோட்டார் வண்டி வாங்கி வாடகைக்கு ஓட்டத் தொடங்கினார்.

பழநிக்கும் பொள்ளாச்சிக்கும் இடையில்தான் முதல் வண்டி ஓடியது. அதனைத் திரு. நாயுடு அவர்களே செலுத்தினார். இன்று இந்தியாவிலேயே மிகுதியான எண்ணிக்கையுடைய மோட்டார்களுக்கு உரியவரானவரும் திரு. நாயுடு அவர்களே.

இன்று கோயமுத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஏறக்குறைய எல்லாப் பாதைகளிலும் அவருடைய வண்டிகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. பக்கத்திலுள்ள நீலகிரி, மதுரை, மலையாளம், கொச்சி முதலிய இடங்களுக்கும் ஒரு பகுதி போய்க்கொண்டிருக்கின்றன.

யு. எம். எஸ். (யுனைட்டெட் மோட்டார்ஸ்-சர்வீஸ்) நிலையமானது அவரது நேர்பார்வையில் பணியாற்றி வருவது. அதன்சார்பில் மட்டும் இருநூறு வண்டிகளுக்கு மேல் இருக்கின்றன. அவைகள் ஓடும பாதையின் நீளம் பதினையாயிரம் மைல்கள். ஒவ்வொரு நாளும் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் அவைகளில் போக்கு வரவு புரிகிறார்கள். அவைகளில் ஓராயிரம் பேர்

களுக்கு மேல் வேலை பார்க்கின்றனர். அவர்களுக்கு ஊதியமாகத் திங்கள்தோறும் பதினேழாயிரம் ரூபாய்களுக்குமேலான தொகை செலவு செய்யப்பெறுகின்றது.



அமெரிக்கா முதலிய மேனாடுகளில் உள்ளதுபோல வசதிகள் பலவும் அமைந்த யு. எம். எஸ். மோட்டார் கம்பெனியின் கோயமுத்தூரிலுள்ள தலைமை நிலையம்.

உயர்திரு நாயுடு அவர்கள் மேனாடுகளுக்குச் சென்று வந்தவர். அமெரிக்காவிற்குச்சென்றார். ஐரோப்பாவிற்குச் சென்றார். இங்கிலாந்திற்குச் சென்றார். இத்தாலி ஜெர்மனி முதலிய உள்நாடுகளுக்கும சென்றார். கிழக்கு நாடுகளாகிய சைனா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கும் சென்றார்.

1940- ஆம் ஆண்டு திரு. நாயுடு அவர்கள் அமெரிக்காவிற்குச் சென்றிருந்தார். அங்குக்கலையில் வல்லவர்கள் பலர் அவருக்கு நண்பர்களாயினர். சிகாகோவில் **15-1-1940** நடைபெற்ற ஒரு கூட்டத்திற்குச் சென்றிருந்தார் நமது நாயுடு அவர்கள். இப்படத்தில் இடது கையில் தோல்பையுடன் அமெரிக்க உடையில் காட்சியளிக்கிறார்கள் நமது அண்ணல்.

எங்குச்சென்றாலும் திரு. நாயுடு அவர்கள் அறிவு ஆராய்ச்சியிலேயே ஈடுபடுவது வழக்கம் அமெரிக்காவில் ஒரு பெரிய பொருட்காட்சி நடந்து கொண்டிருந்தது. அங்குப் பலவகையான பொறிகள் (Machines) வைக்கப்பட்டிருந்தன. அரோரா என்னும் நகரத்தைச்சேர்ந்த 'ஸ்டோனர்கார்பொரேஷன்' என்பவர்கள் வைத்திருந்த காட்சிப் பொறிகளை திரு. நாயுடு அவர்கள் பார்வையிடுகிறார். அமெரிக்கர்கள் செய்துள்ள பொறியிலுள்ள நுட்பத்தை நமது திரு. நாயுடு அவர்கள் (இந்திய நாட்டு இனிய உடையுடன்) பார்த்துக்கொண்டிருக்கிறார்.



உயர்ந்த அறிவுடையவர்கள் தாம் பெற்ற இன்பத்தை மற்றவர்களும் பெறவேண்டுமென விரும்புவார்கள். நம் பெரியாரும் அவ்வாறுஎண்ணினார். மேனாட்டிலிருந்து இந்தியாவந்தபொழுது



உயர்திரு நாயுடு அவர்கள் பல உயர்ந்தபொருள்களை வாங்கிக்கொண்டு வந்தார். தாமாகவும் பல புதுக் கருவிகளை அவர்கண்டு பிடித்தார். அவைகளெல்லாவற்றையும் கோயமுத்தூர் அவிநாசிரோடிலுள்ள அவரது திருமாளிகையில் காணலாம். இப் படத்திலுள்ளது கண்டக்டர் கையாளும் இயந்திரம். அச்சடித்து, கணக்கும்போட்டுக் கொண்டு டிக்கட்டையும் கொடுக்கக் கூடியது.

உயர்திரு நாயுடு அவர்களுக்கு வெளி நாடுகளில் பல நண்பர் உண்டு. கற்றாரைக் கற்றாரே காமுறுவர் என்பது உண்மையன்றோ! உலகியலும் அறிவியலும் கற்றுணர்ந்த பெருமக்கள் பலர் உலகத்தின் பலவேறு பிரிவுகளிலுள்ளவர்கள் அவருக்கு நண்பர்களாக இருந்தனர்.

இயல்வது கரவேல்.

(ஒரு சொல்லாடல்) ஆடல் அரசு.

மாணவன்:—வணக்கம்!

ஆசிரியர்:—வாழி!

மா:—ஐயா! ஔவையார், 'அறஞ்செய விரும்பு; ஆறுவது சினம்; இயல்வது கரவேல்,' என்று இவ்விதமாக ஒவ்வொரு பாடலையும் அகரவரிசை முறையில் தொடர்ந்து எழுதினர் என்கிறீர்கள். இளைஞர்கள் இம்முறைப்படி பாடல்களை எளிதாகப் பாடம் செய்யக்கூடும் என்று சொன்னீர்கள். நல்லதே. சொல் முறையில் இப்படி அமைத்தவர், பொருள் முறையிலும் ஏதேனும் தொடர்பு பார்த்து அமைத்திருக்கிறாரோ? இருப்பின் அதனையும் அன்புகூர்ந்து சொல்ல வேண்டுகிறேன்.

ஆ:—ஆம் அதனையும் தெரிவிக்கிறேன். குழந்தைகட்குத் தின்பண்டம் பெறுவதில் உண்டாகும் இன்பம் பெரிதென்பது உனக்கும் தெரிந்ததுதானே. பொருளாளர் வீட்டுக்குழந்தைகள் பல முறை தின்பண்டங்களைப் பெற்று மகிழ்ச்சி பெறுவதைக் காண்கிறோம். ஏழைப்பிள்ளைகள் அதைப் பெற ஏங்கிநிற்கும் நிலையையும் காண்கிறோம். இந்தக் காட்சியைக் காணுந்தோறும் அறிவு நிறைந்த அருள் நிறைந்த பெற்றோர் தம் குழந்தைகளைப் பார்த்து ஏழைப்பிள்ளைகளுக்குக்கொடுத்துச் சாப்பிடுங்கள் என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். கொடுத்துண்ணும் குழந்தைகளும் இருக்கிறார்கள். கொடாது தாமே உண்ணும் குழந்தைகளும் இருக்கிறார்கள். கொடாத குழந்தைகட்குக் கொடுத்துண்ணும் குழந்தைகளைக்காட்டி, நீங்களும் அம்மாதிரி தருமம் செய்ய ஆசைப்படுங்கள் என்று எடுத்துக் கூறுவதையும் காண்கிறோம்.*

மா:—ஐயா! அறம் என்பதற்கு அன்று நல்வினை என்ற பொருளை மிகவும் பொருந்தும் என்று கூறி இப்பொழுது தருமம் என்ற பொருளைக் கூறுகின்றீர்களே?

ஆ:—நன்று கேட்டாய். நீ நுட்ப அறிவாளி. பாராட்டுகிறேன். நிற்க 'அறமென்ப தருமந்தானே' என்று நிகண்டு கூறுகிறது. இருப்பினும், 'தருமம் செய்ய ஆசைப்படு' என்று பொருள் கூறுவதினும், கடமையைச் செய்ய ஆசைப்படு, புண்ணியத்தைச் செய்ய ஆசைப்படு, நன்மையைச் செய்ய ஆசைப்படு என்ற வேறு பொருள்களின் கருத்துக்களையெல்லாம் தன்னுட்கொண்டுள்ள 'நல்வினையைச் செய்ய ஆசைப்படு' என்ற பொருள், சிறப்புடையதாகத் தோன்றவில்லையா?

மா:—அறத்திற்கு நல்வினை என்று யாரேனும் பொருள் கூறியுள்ளனரோ?

ஆ:—உளர். திருவள்ளுவர், திருக்குறளில் அறன் வலியுறுத்தல் என்ற அதிகாரத்தில்

வீழ்நாள் படாஅமை நன்றுஆற்றின் அஃதொருவன் வாழ்நாள் வழியடைக்குங் கல். என்ற குறளிலே அறம் என்ற சொல்லுக்குப் பதிலாக நன்று என்ற சொல்லை ஆண்டார். உரை கூறிய பரிமேலழகரும் நன்று என்பதற்கு அறம் என்றே பொருள் கூறினார். செயற்பால தோறும் அறனே—என்ற விடத்தும் ஒருவனுக்குச் செய்தற் பான்மையது நல்வினையே என்று கூறினர். ஆதலின் அறம் என்ற சொல்லுக்கு நல்வினை என்ற பொருள், தருமம் என்ற பொருளினும் சிறந்தது என்று கொண்டால்நன்றாய் இருக்கும்.

மா:—நல்லது ஐயா! அப்படியே கொள்கிறேன். மேலே சொல்ல வேண்டுகிறேன்.

ஆ:—*அந்தக் குழந்தைகள் வைத்திருப்பதை நல்ல சொல் கூறி வாங்கி ஏழைப் பிள்ளைகளுக்கு அளிக்கும் பெற்றோரும் உண்டு. தம் விருப்பத்திற்கு மாறாகத் தருமம் செய்யும்படி தூண்டப்பட்ட குழந்தைகள் சினம் கொண்டதையும் பார்க்கிறோம். பிணங்கிக் கொள்வதையும் பார்க்கிறோம். அப்பொழுது பெற்றோர் அவர்கள் சினம், தானே ஆறும்படியான நயமான சொற்களைக்கூறி நல்வழிப்படுத்துகின்றனர். இவற்றை உணர்ந்த ஔவையார் அறஞ்செய விரும்பு என்று முதலில் கூறி ஆறுவது சினம் என்று பின்னால் கூறி கோபத்துடன் செய்யும் தருமம் நல்லதல்ல என்று உய்த்துணரவைக்கின்றார்.

சில குழந்தைகள் தமக்கு வேண்டிய அளவு உண்டும் எஞ்சியிருப்பதைக்கூட ஏழைப்பிள்ளைகட்குக் கொடுக்க மனம் வராமல் மறைத்து வைத்துக்கொள்கின்றனர். அதைப் பார்த்தும், கொடுக்க முடிந்ததைக் கொடுக்காமல் மறைக்காதே என்று நல்ல பெற்றோர் கட்டளையிடுகிறார்கள். இங்ஙனம் பெற்றோர் சொல்லக்கேட்ட குழந்தைகட்கு வெட்கம் வருகிறது. மறைத்து வைத்துக்கொண்ட தின்பண்டத்தை முன்னே எடுத்து வைத்துக்கொள்கிறது. இவற்றை ஔவையாரும் அறிந்திருப்பார் அல்லவா? ஆகையால் இயல்வது கரவேல் என்று கூறினார்.

மா:—கரவேல் என்று சொல்லாமல் ஈவாய் என்று சொன்னால் என்ன? செய்யாதே என்று குழந்தைகளிடம் சொல்வதிலும் இதைச்செய் என்று சொல்வது தானே சிறந்தது என்று நீங்கள் முன்பு கூறினீர்களே!

ஆ:—மறைத்து வைத்திருக்கும் குழந்தையைப் பார்த்து இயல்வது கரவேல் என்று கூறுவது மிகவும் ஆற்றல் உடைய

தாக உள்ளது. நீ மறைக்கும் செயலைக் கண்டுகொண்டேன். இனியும் மறைக்காதே என்ற சொல் குழந்தைக்கு வெட்கம், நகைப்பு, இரக்கம் முதலியவற்றை ஊட்டுகிறது. செய்யும் தவறு நீடிக்காதபடி கண்டிக்க வேண்டியது கடமையாக இருக்கிறது. ஆகையால் இவ்விடத்து இப்படிச் சொல்வது தவறுகாது. நிற்க நல்ல பிள்ளைகள் கொடுத்துண்பர். நடுத்தரப் பிள்ளைகள் சொன்னல் அல்லது கேட்டால் கொடுத்துண்பர். கடைத்தரப் பிள்ளைகள் சொன்னலும் கொடார்; கேட்டாலும் கொடார். அவர்களை வேறு வழியாகத் திருத்த வேண்டியதிருப்பதால் ஒளவையார் இங்கு இயல்வது கரவேல் என்று கட்டளையிடுகிருர். இயல்வதை ஈவாய் என்ருல் இத்துணை ஆற்றலை அச்சொற்ருெடர் தருமா? மேலும், குழந்தைகள் குறிப்பறிந்து தாமே செய்யும் வண்ணம் பழக்குவதற்கும் இம்முறையைக் கையாளுதல் நன்மையைத் தருமன்ருே?

மா:—இயல்வது கரவேல் என்பதைவிட இரப்பது கரவேல் என்று சொன்னல் என்ன?

ஆ:—இரப்பது இழிசெயல் என்பது ஒளவையார் கருத்து முடியாதவன் யாசித்து வாழ்வதை அவர் விரும்பவில்லை. மேலும் குழந்தைகளை இளமையிலேயே கெஞ்சிக்கேட்கும் நிலைக்குவிட அவர் சம்மதிக்கவில்லை. ஏங்கி நிற்கும் மனநிலையைக்கண்டால் அதுவேபோதும். கேட்கும் நிலைவரையில் விடல் நன்றன்று என்பதும் அவர்கருத்து. ஆகையால் கொடுக்கும் தகுதியுடைய குழந்தை பெறுந்தகுதியுள்ள குழந்தையைக் கண்டால் தன்னல் கொடுக்கக்கூடியதை மறைக்கக்கூடாது என்று கருதுகிருர். ஆதலின், 'இயல்வது காவேல்' என்று கூறினர்.

மா:—ஐயா! நன்ருக விளங்கிற்று. நன்றி வணக்கம். அடுத்த செய்யுளைத் தெரிந்துகொள்ள மிகவும் ஆசைப்படுகிறேன்.

ஆ:—நல்லது நாளைக்குக் கூறுவேன்.

ரிலையன்ஸ் பாங்கு ஆப் இந்தியா லிமிடெட்.,

தலைமை ஆபீஸ்:— **13/14, செகண்டு லைன் பீச், மதராஸ்.**

கிளை ஆபீஸ்கள்:-திருச்சி, காரைக்குடி, பரமக்குடி, புதுக்கோட்டை

செலுத்தப்பட்ட மூலதனமும் ரிஸர்வ்களும் ரூ. **5,30,000**

தொழிலிலுள்ள மூலதனம் — ரூ. **35,00,000**

நடப்பு கணக்கு ½% வீதம் ஸேவிங்ஸ் கணக்கு 3%

தவணை கணக்கு 1வருஷம் 3%. 2வருஷம் 3½%.

எல்லா பாங்கிங் அலுவல்களும் ஏற்று நடத்தப்படும்.

மதருஸ், 1—1—1949.

ஜி. ஸ்வாமிநாதய்யர்,
எம். ஏ., பி. எல்., செகிரிடரி.

இலண்டன் பல்கலைக்கழகம்

எச். கிளாடன்

12, 13 - ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் உள்ள பெரிய நகரங்களில் அறிஞர்கள் யூனிவர்ஸிடிகளை ஸ்தாபித்து வந்த போது லண்டனில் ஒருவிதமான முயற்சியும் நடைபெறவில்லை. ஆக்ஸ்போர்டு, கேம்பரிட்ஜ் என்ற சிறிய நகரங்களில் மாத்திரம் இங்கிலாந்தின் பழைய யூனிவர்ஸிடிகள் வளர்ந்துவந்தன.

லண்டனில் பள்ளிக்கூடங்களுக்குப் பஞ்சமில்லை. பழங்கால முதல் வெஸ்ட்மின்ஸ்டர் ஆபேயிலும் ஸெயிண்ட் பால்ஸ் கதீட்ரலிலும் சமய போதனைப் பள்ளிக்கூடங்கள் இருந்தன. பிறகு இன்ஸ் ஆப் கோர்ட்டிலும் சான்ஸரியிலும் சட்டப் பள்ளிக்கூடங்கள் நடைபெற்றன. ஆனால் இவை அனைத்துக்கும் பொதுவான நிர்வாகம் இருக்கவில்லை.

பழைய யூனிவர்ஸிடிகள் புதிய வளர்ச்சியோடு இசைந்து நிற்க முடியவில்லை; புதிய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளத் தயங்கின. இதனால் ஏற்பட்ட கிளர்ச்சியே லண்டனில் ஒரு யூனிவர்ஸிடி எழுவதற்கு மூல காரணமாயிற்று. 19-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பழைய உலகத்திலும் அமெரிக்காவிலும் பரவிய முன்னேற்றக் கொள்கைகளின்படி கல்வி முயற்சி அமைய வேண்டும் என்ற கருத்தோடு அந்தக் கிளர்ச்சி ஏற்பட்டது. முன்னேற்ற நோக்குள்ள பல பெரிய மனிதர்கள் நிதி திரட்டி, யாவருக்கும இடம் கொடுக்கும்படியாக யூனிவர்ஸிடி காலேஜ் என்ற ஒன்றை 1827-ஆம் வருஷம் நிறுவினார்கள். அவர்களுக்கு எதிராக நின்றவர்கள் 1829-ஆம் வருஷம் சர்ச் ஆப் இங்கிலாந்தைச் சார்ந்ததாகக் கிங்ஸ் காலேஜ் எனபதை ஆரம்பித்தார்கள். இந்த இரண்டு காலேஜ்களுக்கும் பட்டம் கொடுக்கும் அதிகாரம் கிடைக்கவில்லை.

பலகாலப் போராட்டத்தின் விளைவாக 1836-ஆம் வருஷம் அரசர் ஒரு பிரகடனத்தை வெளியிட்டார். அதனால் லண்டன் யூனிவர்ஸிடி என்ற மூன்றாவது ஸ்தாபனம், நகரத்திலும் பிரிட்டிஷ் ராஜ்யத்திலும் உள்ள மக்களுக்கு எந்த வேற்றுமையுமின்றிக் கல்வி அபிவிருத்திக்குரிய காரியங்களைச் செய்யும் அதிகாரத்தைப் பெற்றது. இந்த ஸ்தாபனம் பரீட்சை வைத்துப் பட்டம் வழங்குவதோடு நின்றது. இடைத்தர உயர்தரப் படிப்பு விஷயத்தில் இங்கிலாந்தில் இந்த யூனிவர்ஸிடிக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. மற்ற யூனிவர்ஸிடிகளைப்போல் மதிப்பும் அநுபவமும் இல்லாத இது, புதிதாகச் சம்பிரதாயங்களையும் நெறி முறைகளையும் வகுக்கும்படி நேர்ந்தது. வகுப்பு, மத வேறுபாடுகளைப் போக்கிப் புதிய பாடங்களைப் புகுத்தியது. இங்கிலீஷ், விஞ்ஞானம், நவீன பாஷைகள் என்பவை யூனிவர்ஸிடியின் பாடத் திட்

டங்களில் சேர்ந்தன. பெண்களையும் பரீட்சைக்கு எடுத்துக் கொண்டு பட்டமும் வழங்கியது.

1900-ஆம் ஆண்டு முதல் பரீட்சைகளை நடத்துவதோடு நில்லாமல் கல்வி கற்றுக்கொடுக்கும் காரியத்திலும் இந்த யூனிவர்ஸிடி ஈடுபடத்தொடங்கியது. 1929-ஆம் வருஷம் முன்பு ஏற்பட்ட இரண்டு காலேஜ்களும் யூனிவர்ஸிடியோடு இணைந்தன. இப்படியே நகரத்தில் பல பகுதிகளில் இருந்த பள்ளிக்கூடங்கள் யாவும் இணைந்தன. இப்படி இணைந்த கலாசாலைகள் 34 இப்போது இருக்கின்றன. இவற்றில் 12 வைத்தியக் கலாசாலைகளும், பிரிட்டிஷ் போஸ்ட் கிராஜுவேட் வைத்தியப் பள்ளிக்கூடமும், 4 சமய போதனைக் கல்லூரிகளும், 4 பெண்கள் காலேஜ்களும் சேர்திருக்கின்றன.

1939-ஆம் வருஷம் இணைந்த கலாசாலைகள் எல்லாவற்றிலும் மொத்தம் 14,000 மாணுக்கர்களும், 415 புரொபஸர்களும், 679 ஆசிரியர்களும் இருக்கிறார்கள். சமய அறிவு, கலைகள், சட்டம், சங்கீதம், வைத்தியம், விஞ்ஞானம், இஞ்சினீரிங், அரசியல், வியாபாரம், தொழிலறிவு என்ற பல துறைகளில் இந்த ஆசிரியர்கள் கற்பிக்கிறார்கள். மாகாணங்களிலுள்ள யூனிவர்ஸிடி காலேஜ்களிலும், பிரிட்டிஷ் ராஜ்யத்திலும் கடலுக்கப்பாலுள்ள நாடுகளிலும் உள்ள மாணவர்களுக்கு அங்கங்கே உள்ள ஸ்தாபனங்களின் மூலம் பரீட்சைகளை இது நடத்தி வருகிறது. இப்படி வெளியிலிருந்து பரீட்சைக்கு வரும் மாணுக்கர்கள் 10,000 பேர் 1939-ஆம் வருஷம் இருந்தனர். லண்டன் மாநகரத்தில் பட்டம் பெறும் எண்ண மில்லாவிட்டாலும் பிரசங்கங்களைக் கேட்டுப் பயன்பெற விரும்புகிறவர்களுக்கு இந்த யூனிவர்ஸிடி வசதி அளிக்கிறது.

பல ஆராய்ச்சிக்கூடங்கள் இருக்கின்றன. சரித்திர ஆராய்ச்சிக்கழகம் கலைக்கழகம் போன்ற பல ஆராய்ச்சி ஸ்தாபனங்கள் வேறு இருக்கின்றன. தலைநகரத்தில் இருப்பதனால் பிரிட்டிஷ் மியூஸியம், பப்ளிக் ரிகார்டு ஆபீஸ், ஓவிய சாலைகள் முதலியவற்றை ஆராய்ச்சிக் கழகங்கள் பயன் படுத்திக்கொள்ள முடிகிறது.

கீழ்நாட்டுக் கலைப் பள்ளிக்கூடமும், ஆப்பிரிக்காக் கலைப் பள்ளிக்கூடமும் அந்த அந்தப் பிரதேசத்துக் கலைகளில் பயிற்சி அளிக்கின்றன.

யூனிவர்ஸிடியின் நிர்வாகம் மத்திய நிலையத்தாலும் காலேஜுகளாலும் நடைபெறுகிறது. மத்திய நிலையம் புரொபஸர்களையும் ஆராய்ச்சிக்காரர்களையும் நியமித்துப் பரீட்சைக்குரிய பாடத் திட்டங்களை வகுத்து உதவி நிதிகளைத் திட்டம் செய்கிறது. லண்டன் யூனிவர்ஸிடி மாணுக்கர்கள் தங்கிப் படிக்க வசதியளிப்பதில்லை. அங்கங்கே தங்கிக் காலேஜுகளில் படிக்கும் மாணுக்கர்கள் தங்கள் காலேஜளவில் அபிமானம் உள்ளவர்களாயிருக்கிறார்கள்.

மற்ற யூனிவர்ஸிடிகள் அந்த அந்த நகர மக்களைக் கவர்ந்து நிற்கின்றன. லண்டன் நகரவாசிகள் எல்லாரும் லண்டன் யூனிவர்ஸிடியில் பற்றுள்ளவர்கள் என்று சொல்லமுடியாது. கௌரவமும் போதிய விசாலமும் உள்ள கட்டிடவசதி இந்த யூனிவர்ஸிடிக்கு இல்லாமல் இருப்பது அதற்கு ஒரு காரணம். ராக்பெல்லர் தர்ம நிதியைக் கொண்டு லண்டன் மாநகரத்தின் நடுவே ஒரு பெரிய கட்டிடம் இப்போது ஏற்பட்டிருக்கிறது. ஸெனேட் மண்டபமும் புத்தகசாலையும் அதில் இருக்கின்றன. இன்னும் சில மண்டபங்களை எழுப்பத் திட்டம் போட்டிருக்கிறார்கள்.

யுத்தகாலத்தில் லண்டனிலிருந்து மக்கள் வெளியேறினர்கள். அப்போது மத்திய நிர்வாகமும் காலேஜுகளும் சுற்று வட்டாரங்களுக்கு மாற்றப்பட்டன. மிகவும் சங்கடமான அந்தக் காலத்திலும் இந்த யூனிவர்ஸிடி தன் கடமைகளை நிறைவேற்றி வந்திருக்கிறது.

இந்த யூனிவர்ஸிடியில் ஆசிரியர்களாக இருந்த பலர் அரசாங்க நிர்வாகத்தில் சேர்ந்திருக்கிறார்கள்.

லண்டன் யூனிவர்ஸிடி உலகம் முழுவதும் பரவிய ஸ்தாபனம். இதில் கல்வியின் தரம் எப்போதும் உயர்ந்ததாகவே இருக்கிறது. இதற்கு வந்த இடையூறுகளைப் போல வேறு எந்தச் சர்வகலாசாலைக்கும் வந்ததில்லை. ஆனாலும் அவற்றையெல்லாம் தாண்டித் தன்னுடைய புகழை இது நிலைநாட்டி விளங்குகிறது. —மஞ்சரி.

சென்னிமலை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம். லிமிடெட், நெ. K. 885.

(ஈங்கூர், R. S.) சென்னிமலை (கோயமுத்தூர் ஜில்லா)

விற்பனைக்குத் தயார்! குறைந்த விலை!! நீடித்த உழைப்பு!!!

எங்களிடம் சிலோன், மலேயா முதலிய வெளி நாடுகளுக்கு ஏற்றுமதிக்கான 20 நெ. பாவுஞ்சு, மேட்டு முதலிய பலரக சேலைகளும், நம் நாட்டுத் தேவைக்கான கெட்டிச் சாயச்சேலைகள், வேஷ்டித் தான்கள், துண்டுத் தான்கள், முதலியனவும் விலை சரசமாகக் கிடைக்கும்.

மொத்த வியாபாரிகளுக்கும் ஏற்றுமதியாளர்களுக்கும் விசேஷசலுகை உண்டு. வெளி நாடுகளுக்கு ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்.

விவரங்களுக்கு நேரிலோ கடித மூலமோ மேற்கண்ட விலாசத்திற்கு எழுதக் கோருகிறோம்.

தலைவர்: M. P. நாச்சிமுத்து, B. A., B. L.,

சிறை இல்லாத நாடு.

இந்தியாவில் சிறைச்சாலைகளே இல்லாத ஒரு இடம் இருக்கிறது என்றால் அது லடாக்தான். லடாக் காஷ்மீர் ராஜயத்தின் ஒரு பகுதி. மலைப்பாங்காகவும் மணல் பாங்காகவும் செழிப்பற்றிருக்கும் இப்பிரதேசம் கடல் மட்டத்திலிருந்து 11,000 அடி உயரத்தில் உள்ளது. இதன் விஸ்தீர்ணம் 30 ஆயிரம் சதுர மைல்; ஜனத்தொகையோ 36 ஆயிரம் பேர்தான். அதாவது சென்னை நகரத்தின் ஜனத்தொகையில் 40-ல் ஒரு பங்கு மக்களே இங்கு வசிக்கின்றனர். மக்களில் பெரும்பாலானவர்கள் விவசாயிகளே. இங்கு பார்லி, கோதுமை முதலியன பயிராகின்றன. பார்லியிலிருந்து தயார் செய்யும் 'சாட்டு' என்ற உணவையே அவர்கள் சாபபிடுகிறார்கள். இங்கு கோடைக்கும் குளிர் காலத்துக்கும் மிகுந்த வித்தியாசம் தெரியும். குளிர்காலத்தில் தாங்க முடியாத குளிராக இருக்கும். பூஜ்யம் டிகிரிக்கும் குறைந்த சீதோஷ்ண ஸ்திதியே குளிர்காலத்தில் நிலவியிருக்கும். இங்கு அதிக பக்ஷ உஷ்ணம் 63 டிகிரிதான்; குறைந்த பக்ஷம் 43 டிகிரி அதிக பக்ஷ உஷ்ணம்; கோடைக்காலத்தில் கோடைக்கானலில் நிலவியிருக்கும் உஷ்ணத்துக்குச் சமமாகும்.

பனி படர்ந்த இமயமலைப் பிரதேசத்திலிருந்தபோதிலும், பனியாறுகள் உள்ள பிரதேசமாக இருந்தபோதிலும் லடாக்கில் தண்ணீர் பஞ்சம்தான்.

லடாக்கின் தலைநகரம் லே என்பதாகும். காஷ்மீரின் தலைநகராகிய ஸ்ரீ நகரிலிருந்து லேக்கு 245 மைல் தூரம்தான். மலைப் பிரதேசமான பாதையானதால் மட்டக் குதிரைச்சவாரி செய்து போக 15 நாட்களாகும். விமானத்தில் 1மணி 20 நிமிஷ நேரத்தில் போய் விடலாம்.

லே யிலிருந்து இந்தியா, திபேத் யார்க்கண்டு, கிழக்கு துருக்கிஸ்தான் முதலிய இடங்களுக்கு வியாபார மார்க்கங்கள் செல்லுகின்றன. சிந்து நதியின் 300 மைல் நீளப் பகுதி இந்நாட்டில் ஓடுகிறது.

லடாக் மக்களில் இந்துஸ்தானியைப் புரிந்து கொள்ளுபவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் மங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர்கள். அநேகமாக எல்லோரும் புத்தமதத்தினர்கள்தான். ஆனால் ஒரே குடும்பத்தில் ஒருவர் பௌத்தராகவும், ஒருவர் முஸ்லீமாகவும், ஒருவர் கிறிஸ்தவராகவும் இருப்பதும் இங்கு அதிசயமில்லாத செய்தி. இவர்களுடைய புத்தமதம் ஒரு தனி தினுசாக இருக்கும். இந்தியக் கலாசாரம் லடாக்கில் எப்போதோ பரவிவிட்டது. இந்தியாவின் புராதனமான கிரந்தங்களின் கையெழுத்துப் பிரதிகள் இங்கு உண்டு.

லடாக்கில் 100-க்கு 90 பேர் படித்தவர்கள் என்ருல் அதிசயமாகத்தான் இருக்கிறது. இந்நாட்டில் பௌத்த மடங்கள் ஏராளம். பௌத்த சந்நியாசிகளும், சந்நியாசினிகளும் தத்தமக்குரிய மடங்களில் வசித்துவருகிருர்கள். இவர்கள் கல்யாணம் செய்துகொள்ளக் கூடாது என்ற கண்டிப்பான கட்டுப்பாடு இல்லாதபோதிலும், அநேகமாக கல்யாணம் செய்துகொள்ளாமல்தான் இருக்கிருர்கள்.

லடாக்கில் சினிமாக்களோ, செய்திப் பத்திரிகைகளோ கிடையாது. அதற்குப் பதிலாக பாட்டு, நாட்டியம் முதலியவை அவர்களுக்கு உல்லாசப் பொழுதுபோக்குகளாக உள்ளன. ஷெனய் முரசு முதலியவையே இவர்களுடைய வாத்தியங்கள். லடாக் மக்களில் சிலர் கிராப் வைத்திருந்தாலும், பிற ஆண்களும் பெண்களும் சடை போட்டுக்கொண்டிருக்கிருர்கள்.

லடாக்கில் பல புருஷர்களுக்கு ஒரு பெண் மனைவியாக இருப்பது ஒரு சாஸ்திர சம்பந்தமான ஒரு விஷயம். ஒரு குடும்பத்தில் மூத்த மகன் ஒருத்தியைக் கல்யாணம் செய்து கொண்டால், அவள் அவனுடைய மற்ற சகோதரர்களுக்கும் மனைவியாகி விடுகிருள். அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு 'மூத்த அப்பா' வும் 'சின்ன அப்பா' க்களும் இருப்பார்கள். ஏக நாயக மணத்தை இம்மக்கள் கைக்கொள்ளுவதை இன்னும் அவசியம் என்று கருதவில்லை. பல கணவன் மார்களுக்கு ஒருத்தி மனைவியாக இருப்பதன் லாபம் என்னவென்ருல், ஜனத்தொகை அளவுக்கு மீறி பெருகிவிடாமல் இருக்கும்.

மூத்த மகன் குடும்ப சொத்துக்கு வாரிசு. அதனல் சொத்துப் பிரிவினை கிடையாது; எல்லா சகோதரர்களும் ஏக குடும்பமாகக் காலம் கழிக்க முடிகிறது.

லடாக் மக்கள் உல்லாசமும் ஹாஸ்ய ஏகமும் சிரிப்பில் பிரியமும் கொண்டவர்கள். செழிப்பில்லாத பூமியில் காலங்கழிப்பவர்களாதலால் கஷ்டப்பட்டு ஆணும், பெண்ணும் வேலை செய்கிருர்கள். இவர்களுடைய அமைதியான வாழ்க்கையைக் குலைக்கும் முறையில் பாகிஸ்தானிகள் இந்நாட்டின்மீது படையெடுத்து வந்தார்கள். ஒரு சமயம் லே நகரத்துக்கு 12 மைல் தூரம் வரைக்கும் பாகிஸ்தான் படைகள் வந்துவிட்டன. இந்தப் படையெடுப்பைத்தடுத்து நிறுத்தியதுடன் லடாக் மக்களின் உதவியைக் கொண்டு இந்தியப் படையினர் அவர்களைத் துரத்தியடித்துவிட்டனர்.

1948-ம் வருஷத்தில் கர்னல் பிரீதிசங் என்பவர் இந்திய சர்க்காரால் லடாக்குக்கு அனுப்பப்பட்டார். அவர் சென்று லடாக் மக்களுக்கு பயிற்சி அளிக்கத்தொடங்கினர். அவர் திரட்டிய முதல் ராணுவத்தில் மொத்தம் 80 பேர்கள் தான் இருந்தார்கள். விரோதிப்படைகளோ தலைவாசலில் வந்து ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருந்தன. நம் படைகளுக்கு சப்ளைகள் அனுப்பு

வதற்கு ஏற்ற சாலை மார்க்கங்கள் இல்லாததலால் அவர்கள் லடாக்கில் கிடைக்கும் உணவு வகைகளைக் கொண்டே சரிக்கட்டி வந்தார்கள்.

மே மாதத்தில் மேஜர் ஜெனரல் கே. எஸ். திம்மய்யாவும் மேஜர் சிங்கும் அங்கு விமானத்தில் சென்று ஒரு விமான மார்க்கத்தை உண்டாக்கினர்கள். இந்த விமானப் பிரயாணம் லடாக்கின் சரித்திரத்தில் ஒரு புதிய மாறுதலாகும். இந்திய ராணுவம் வெற்றி பெற வேண்டும் என்று பௌத்த சந்நியாசிகள் மூன்று நாட்களாக இடைவிடாமல் பிரார்த்தனை செய்ததாகவும், மூன்ரு வது நாள் இந்த விமானம் வந்திறங்கியதாகவும், லடாக்மக்கள் இந்தியாவிலிருந்து வந்த 'சிறகு முளைத்த குதிரை'க்குக் கொள்ளும் புல்லும் கொடுக்க வந்ததாகவும் கூறப்படுகிறது.

அதன்பிறகு கூர்க்கப் படைகளும் இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்டன. அதற்கு தலைவராக மேஜர் ஹரிசந் சென்ருர். பாதுகாப்பு ராணுவம் போதிய அளவு விஸ்தரிக்கப்பட்டதும் எதிரியின் தாக்குதலை முறியடித்துத் துரத்தத் தொடங்கினர்கள்.

1949, ஜனவரி முதல் தேதி யுத்த நிறுத்த நாள். அன்றைய தினத்தில் லடாக் மாகாணத்தின் லடாக் தாசில் நம் துருப்புகளின் கீழ் இருந்தது. இந்த லடாக் தாசிலின் விஸ்தீரணத்தையும் ஜனத்தொகையையுமே ஆரம்பத்தில் கொடுத்திருக்கிறேம். அத்துடன் கார்கில் தாசிலும் நம் வசமே இருக்கிறது. அதன் ஜனத்தொகை சுமார் 53 ஆயிரம் பேர். எதிரிகள்வசம் ஸ்கார்து தாசில் உள்ளது—அதன் ஜனத்தொகை சுமார் ஒரு லட்சம்; விஸ்தீரணம் 8,522 சதுரமைல்.

நம் பிரதம மந்திரி பண்டித நேரு ஜுலை 4-லிருந்து 8 முடிய லடாக்கில் சென்று தங்கியிருந்தார். ஷேக் அப்துல்லாவும் உடன் சென்றிருந்தார். அப்போது பண்டித நேரு லடாக் மக்களுக்குக் கூறிய சில மொழிகளாவன.

"இந்திய ராணுவம், லடாக்கில் அபாய நிலை நீங்கும் வரையில் தான் இருக்கும். நீங்களும், ஜம்மு, காஷ்மீர் நாட்டினரும் விரும்பும் வரையில் தான் அது இங்கு இருக்கும்...........பழைய படியும் எதிரிகள் இங்குவரத் தொடங்கில் அவர்களை விரட்டியடிக்கத் தயாராக இருக்க வேண்டியது நம் கடமையாகும்.

"நீங்கள் வறுமையினல் கஷ்டப்படுகிறீர்கள். ஆஸ்பத்திரிகள், பள்ளிக்கூடங்கள், குடிசைத்தொழில்கள், சிறிய நீர்ப்பாசனத்திட்டங்கள் முதலியவை உங்களுடைய அவசரத் தேவைகள்.

"நாம் மக்கள் ராஜ்யத்தையே நம் லட்சியமாகக் கொண்டிருக்கிறேம். சிலர் கூடி ஒரு நாட்டை ஆட்சி செய்வதையோ, மக்களின் நலனைப் பறித்து, அந்தச் சில மக்கள் லாபம் அடைவதையோ நாம் விரும்பவில்லை"

—'சக்தி'

விளையும் பயிர்; குழந்தைகள் வளர்ச்சி.

(சென்ற இதழ்தொடர்ச்சி)

அவர்கள் பாடிக்கொண்டே ஆடுவார்கள். அவர்களுக்கு எதில் விருப்பம் உண்டோ அதைப்பற்றிய பாடல்களைப் பாடிக்கொண்டு ஆடுவார்கள்.

சீர் தொண்டை நாட்டினிலே,
செங்கற்பட்டு கோட்டத்திலே
வாலாஜாபாத்தினிலே—கிளியே
வாழுகின்றோம் கேட்டிடுவாய்

என்று உணர்ச்சி ததும்பப்பாடிக்கொண்டு அவர்கள் ஆடுவது கண்கொள்ளாக் காட்சியாகும். உணர்ச்சியூட்டும் கருத்துகள் அமைந்த பாட்டுக்களைப் பாடிப்பாடி ஆடுகிறார்கள் குழந்தைகள். அதனால் அவர்கள் உடம்புகள் வளரும் போது உள்ளமும் வளர்ச்சியடைகிறது.

கற்பனை ஆற்றலையும் குழந்தைகளிடத்தில் வளர்த்தல் வேண்டும். கற்பனை கதை எழுதத்தான் பயன்படும் என்பதில்லை கவிதைகள் புனையத்தான் கற்பனை தேவை என்பதில்லை. நம்முடைய அன்றாட வாழ்க்கையில் கற்பனை ஆற்றல் நன்கு பயன்படுகிறது.

புதுவீடு கட்ட விரும்புகிறான் ஒருவன். முதலில் வீடு எப்படி அமைய வேண்டுமென்று எண்ணுகிறான், எத்தனை அறைகள் இருக்க வேண்டும்? அவைகள் எவ்வெவ்வாறு இருத்தல் வேண்டும்? ஒவ்வொன்றிலும் என்னென்ன பொருள்களெல்லாம் வைக்கலாம்? என்று முடிவு செய்கிறான். வீடு கட்டி முடிந்து அதில் தான் குடியிருக்கும் போது எவ்வாறிருக்கு மென்பதை தன் மனக்கண்முன் காண்கிறான். கண்டு மகிழ்கிறான். பிறகு வீடு கட்டி முடிக்கிறான். கற்பனை ஆற்றல் அவனுக்குப்பயன்படுகிறது.

பலர் நல்ல கற்பனை ஆற்றலுள்ளவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எதிர்காலத்திற்கு வேண்டியவற்றைச் செம்மையாக ஏற்படுத்திக்கொள்ளுகிறார்கள். கற்பனை ஆற்றலையும் குழந்தைகளிடத்திலே வளர்த்தல் வேண்டும். அதற்கும் விளையாட்டுகள் பயன்படும். ஓடப்பாட்டு பாடுவது குழந்தைகளுக்கு மகிழ்ச்சிதரும். 30 அல்லது 40 சிறுவர்கள் படகு வடிவத்தில் உட்கார்ந்து கொள்வார்கள் படகின் உட்பக்கத்தில் இரு மருங்கிலும் தாங்கள் இருப்பது போல் கற்பனை செய்து கொள்வார்கள். தங்கள் கைகளில் படகோட்டும் துடுப்புகள் இருப்பதாகவும் எண்ணிக்கொள்ளுவார்கள். துடுப்புத் துழாவிப் படகோட்டத் தொடங்கு

வார்கள். பாட்டுப் பாடிக்கொண்டே அவர்கள் படகைச் செலுத்துவது நல்லதோர் காட்சியாகும். ஒருவன் முன்னே ஒருவரி பாடுவான். மற்றவர்கள் அவனுக்குப் பின்னல் ஏலேலோ ஐலெசா என்று சொல்லுவார்கள்.

சூரிய நமஸ்காரம் நல்லது. உடல் வளர்ச்சிக்குப் பெரிதும் துணை செய்வது. எத்திறத்தவரும் அதனைச் செய்யலாம். பகலவன் ஒளியில் பலவகைச் சத்துக்கள் இருக்கின்றன. அவற்றுள் முதன்மையானது D. என்னும் உயிர்ச் சத்து. பகலவன் வணக்கத்தைப் பண்டைக்கால முதல் நம் நாட்டுப் பெரியோர்கள் செய்து வந்தனர். நாமும் செய்வோம். நம் குழந்தைகளும் செய்ய வேண்டும். விளையும் பயிருக்குப் பகலவன் ஒளியும் அதிலுள்ள உயிர்ச்சத்துக் களும் பெரிதும் தேவை.

குழந்தைகள் உடல் வளர்ச்சிக்கு விளையாட்டுகள் பெரிதும் பயன் படுகின்றன. விளையாட்டைவிட உணவு தொடர்பாக நாம் பெரிதும் பார்த்தல் வேண்டும். சிறு குழந்தைகளுக்குப் பாலுணவு மட்டும் போதுமானது. பாலில் எல்லா உணவுச் சத்துக்களும் உள்ளன. பிறந்து சில மாதங்கள் வரையில் குழந்தைகள் பால் ஒன்றையே பருகி உயிர்வாழ்கின்றன. உயிர் வாழ்தலோடு உடல் வளர்ச்சிக்கு வேண்டிய சத்துக்களும் அப்பாலிலேயே இருக்கின்றன. தாய்மார்கள் காலமறிந்து குழந்தைகளுக் குப் பாலூட்டுவார்கள். அழுகிறபோதெல்லாம் குழந்தைக் குப் பால் தரலாகாது. பரிவுடன் உணவு ஊட்டுதலுக்குப் "பால் நினைந்தூட்டும் தாய்" என்று மாணிக்கவாசகர் பாடலொன்று கூறுவது. நினைவு கூரத்தக்கது.

பால் மறந்ததும் நெய்ச்சோறு தருகிறோம். சிறிது சிறிதாகக் குழந்தை வளர்கிறது. உணவு அளவும் வளர்கிறது. ஆனால் எந்தக் காலத்திலும் மிதமிஞ்சிய உணவு தரலாகாது. அளவாக உண்ண வேண்டும். சத்துள்ள உணவை உண்ண வேண்டும். தண்ணீர் மிகுதியாகப் பருக வேண்டும். குறிப்பிட்ட நேரத்தில் உணவு உண்ணப்பழகுவது நல்லது. உணவில் தூய்மையாகவும், ஒழுங்காகவும் இருப்பவர்கள் பெரும்பாலும் மற்றவைகளிலும் ஒழுங்காக இருப்பார்கள். பள்ளிக்கூடம் போகும் சிறுவர், சிறுமிகள் மற்ற எல்லாவற்றையும் விட ஒழுங்கு முறைப்படி உண்ணவும் பழகிக் கொள்ளுவதுதான் நல்லது.

விளையும் பயிர்; குழந்தைகள் வளர்ச்சி.

(சென்ற இதழ்தொடர்ச்சி)

தங்கள் குழந்தைகள் உணவு கொள்ளுவதில் பெற்றோர்கள் விழிப்பாயிருத்தல் வேண்டும். அதேபோல் அவர்கள் மலங்கழிப்பதிலும் சிந்தை செலுத்த வேண்டும், ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட வேளையில் வெளிக்குப் போகக் குழந்தையைப் பழக்குதல் வேண்டும். காலை 5-மணிக்கு எழுந்து எழுந்தவுடன் காலைக்கடனாற்றும் பழக்கத்தைக் குழந்தை பெற்றுவிட்டால் அக்குழந்தை நோயில்லாத நீண்ட வாழ்வு வாழும் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உண்டு. குழந்தைகளுக்குத் தொண்டாற்றுதற்காக ஏற்பட்டிருக்கும் மாணவ இல்லங்களிலும், மாணக்கியர் இல்லங்களிலும் பொறுப்புள்ளவர் இந்தப்பகுதியை நன்கு கவனிக்க வேண்டும், என்பதும் என் ஆவல். இனி, குழந்தைகளின் வளர்ச்சிக்காக வேண்டப்படுபவைகளுள் தூக்கமும் ஒன்றாகும். குழந்தைகள் நன்றாக விளையாடவேண்டும். விளையாட்டிலேயே படிக்க வேண்டும். சத்துள்ள உணவைக் காலத்தில் உண்ண வேண்டும். நேரத்தில் மலம் முதலிய கழிவுப் பொருள்களைப் போக்கிக் கொள்ள வேண்டும். இவ்வளவிற்கும் மேலாக ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட நேரம் தூங்க வேண்டும். சிறு குழந்தைகள் அதிக நேரம் தூங்க வேண்டும். வயது ஏற ஏறத் தூங்கும் நேரத்தைக் குறைத்துக்கொள்ளலாம். 10-வயதுக்கு மேற்பட்ட சிறுவர்கள் 8-மணி நேரம் இரவில் தூங்கினல் போதுமானது. பகலில் தூக்கம் தேவையில்லை. ஆனல் உணவுக்குப்பிறகு சிறிது நேரம் ஓய்வெடுத்துக்கொள்ளுதல் நல்லது.

இது காறும் கூறியவைகள் செயல் முறையில் வருமா? எனச் சிலர் ஐயுறலாம். அத்தகைய ஐயத்திற்கு இடம் வேண்டாம் எனக் கேட்டுக் கொள்ளுகிறேன். தமிழ் நாட்டில் ஓரிடம் இருக்கிறது. அங்கு ஓர் குருகுலம் நடக்கிறது. அதில் 550 சிறுவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நம் நாட்டின் பல ஜில்லாக்களிலும் இருந்து போயிருப்பவர்கள். சேலத்துச் சிறுவனும் செங்கற்பட்டுச் சிறுவனும் அங்கு இருக்கிறார்கள். நெல்வேலிச் சிறுவனும் நீலகிரிச் சிறுவனும் அங்குப்படிக்கிறார்கள். வட ஆர்க்காட்டுச் சிறுவனும் தென் ஆர்க்காட்டுச் சிறுவனும் அங்கு விளையாடுகிறார்கள். தஞ்சைச் சிறுவனும் மதுரைச் சிறுவனும் அங்கு உண்கின்றார்கள். திருச்சிச்சிறுவனும் சென்னைச் சிறுவனும் அங்குக் கல்வி கற்கிறார்கள். செல்வப்பிள்ளைகளும் ஏழைப்

பிள்ளைகளும் அங்கு உள்ளனர். அரிஜனச் சிறுவனும், அந்தணச்சிறுவனும் அங்கு ஒன்றாக உண்டு, படித்து வருகிறார்கள். சிறுவர்களாகிய அவர்களே தங்களுக்குள் ஓர் பார்லிமெண்டு அமைத்துக் கொண்டு தங்கள் இல்லத்து ஆட்சியைத் தாங்களே நடத்திக் கொள்ளுகிறார்கள். அவர்களுக்குள் 10 அமைச்சர்கள் இருக்கிறார்கள். இல்லத்து வேலைகளை எல்லாம் சிறுவர்களே செய்து கொள்ளுகிறார்கள். அவர்களே காய்கறி பயிரிடுகிறார்கள். காய்கறிகளைத் தோட்டத்திலிருந்து அன்றாடம் கொண்டு வருகிறார்கள். அவற்றைச் சமையலுக்குத் தக்கபடி நறுக்கிக்கொடுக்கிறார்கள். ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வருகிறார்கள். இடம் துப்புரவு செய்கிறார்கள். எலெக்டிரிக் விளக்குகள் போடுகிறார்கள். எல்லாப் பணிகளும் தங்களுக்குள் முறை போட்டுக்கொண்டு செய்து கொள்ளுகிறார்கள். காலை எழுந்தவுடன் படிக்கிறார்கள். கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு பாடுகிறார்கள். மாலை முழுதும் விளையாடுகிறார்கள். அந்தக் குருகுலம் 33-ஆண்டுகளாக நடந்து வருகிறது. அது செங்கற்பட்டு ஜில்லாவிலே செங்கற்பட்டிலிருந்து அரக்கோணம் போகும் இருப்புப்பாதை வழியிலே உள்ள வாலாஜாபாத்தில் உள்ளது. அதன் பெயர். வாலாஜாபாத் இந்துமத பாடசாலை, வள்ளலார் மாணவர் இல்லம். மக்கட் செல்வம் படைத்தோர் அங்கு எப்பொதும் சென்று வரலாம். செல்லுவதால் நன்மை பல நாட்டுக்கு ஏற்படும் என நம்புகிறேன். யாவரும் ஆங்குச்சென்று குழந்தைகளின் குருகுலத்தைக்கண்டு மகிழுமாறு வேண்டுகிறேன். வணக்கம்.

இந்துமத பாடசாலையின் அப்பா (திரு. வா. தி. மாசிலாமணி) அவர்கள் திருச்சி வானொலியில் பேசியது.

மேட்டூர் அணைக்கட்டு

வேளாண்மையும் கைத்தொழிலுமே ஒரு நாட்டு உயர்வுக்கு உரியவை. வேளாண்மை நன்முறையில் நடைபெற வேண்டுமாயின், நாட்டில் பெரிய ஆறுகள் இருத்தல் இன்றியமையாததாகும். அந்த ஆறுகளின் நீரை வயல்களுக்குக் கொண்டு செல்லத்தக்க கால்வாய்கள் பல இருத்தல் வேண்டும். ஆறுகள் ஆண்டு முழுவதும் நீருடையனவாக இருத்தல் வேண்டும். அவை 'உயிர் உள்ள ஆறுகள்' எனப்படும்.

பல ஆறுகள் ஆண்டில் பல திங்களில் நீர் அற்றனவாக இருக்கின்றன. இத்தகைய ஆறுகளில் வெள்ளம் வரும்போது, அந்த வெள்ளத்தை அணை ஒன்றைக் கட்டித் தேக்கி, ஆற்றில் தண்ணீர் இல்லாத போது, அத் தேக்கத்திலிருந்து கால்வாய்கள் மூலம் நீரை வயல்களுக்குப் பாய்ச்சுதல் நல்ல முறையாகும். எல்லா நாட்டினரும் இந்த முறையைக் கையாண்டு வருகிறார்கள். நமது தமிழ் நாட்டிலும் இத்தகைய அணைக்கட்டுகள் பல உண்டு. பழைய தமிழ் நாட்டு மன்னரும் இம்மாதிரி அணைகளைக் கட்டிப் பயிர்த்தொழிலை வளம்படுத்தி வந்தனர்.

தஞ்சாவூர், சேலம் முதலிய ஜில்லாக்களில் உள்ள மேட்டுப்பாங்கான இடங்களுக்கு நீர் பாய வசதி இல்லாமல் இருந்தது. அதனால் அவ்விடங்களில் நெடுங்காலமாகப் பயிர்த் தொழில் செவ்வையாக நடைபெறவில்லை. இக்குறையைப் போக்க அரசாங்கத்தார் முனைந்தனர். ஆறு கோடி எண்பது லக்ஷம் ரூபாய் செலவு செய்தனர்; ஆறு ஆண்டுகள் இடைவிடாது வேலைசெய்தனர்: மேட்டூர் என்னும் இடத்தில் காவிரியில் மிகப்பெரிய அணை ஒன்றைக் கட்டினர். அஃது உலகில் உள்ள எல்லா அணைக்கட்டுகளிலும் பெரியது என்று கூறப்படுகிறது.

காவிரியாறு சுமார் ஐந்நூறு கல் நீளம் உடையது. இது குடகு நாட்டு மலையொன்றில் உற்பத்தியாகிக் கிழக்கு நோக்கிப் பாய்கிறது. இது முதலில் மைசூர் காட்டின் வழியாய் ஓடி, மலை நாட்டு வழியே பாய்ந்து, மேட்டூருக்கு அரு

கில் சமவெளியில் பாய்கின்றது. இதில் ஆவணி முதல் மார்கழி வரையில் வெள்ளம் கரைபுரண்டு ஓடும். இந்த நீர் முடிவில் வங்காளக் குடாக்கடலில் சென்று கலக்கின்றது. இக் கலப்பால் யாருக்கும் நன்மை இல்லை அல்லவா? அத ஞற்ருன் இந்நீர் வீணுகாமல் இருக்க அணைக்கட்டு அவசி யமாகிறது.

மேட்டூர் என்பது சேலம், கோயம்புத்தூர் என்னும் இரண்டு ஜில்லாக்களும் கலக்கும் இடத்திலுள்ள இடம். அதன் அருகில் காவிரியாறு இரண்டு மலைகட்கு இடையே ஓடுகின்றது. அங்கு அதன் அகலம் ஆயிரத்து நூறு அடி ஆகும். அந்த இடத்தில் இரண்டுமலைகளையும் எல்லைகளா கக்கொண்டு, நடுவில் அணைகட்டப் பட்டு இருக்கிறது. இதில் தேக்கப்படும் நீர், காவிரியாற்றில் சுமார் முப்பத்து மூன்று கல் தூரம் பரவக் கூடிய நீராகும். இந்த அணைக் கட்டின் உயரம் கடல் மட்டத்துக்குமேல் சுமார் எண்ணூறு அடியாகும். இதன் அகலம் இருபதரை அடி; அணைக்கட் டின் நீளம் ஒரு கல் இருபது அடி ஆகும்.

இந்த அணைக்கட்டு நீரைக்கொண்டு, முன் சாகுபடி செய்யப்பட்டு வந்த வயல்களைப்போல மூன்று மடங்கு மிகு தியான பரப்புள்ள நிலங்களைச் சாகுபடி செய்யலாம் என்று அதிகாரிகள் அறைகிருர்கள். இந்த அணைக்கட்டு நீரிலிருந்து மின்சாரம் உண்டாக்கப்படுகிறது. அம்மின் சாரம் மேட்டூருக்கும் சென்னைக்கும் இடையிலுள்ள இடங் களில் விளக்கெறிக்கப் பயன்படுகின்றது. இந்த அணைக் கட்டினுல் மேலும் என்னென்ன நன்மைகள் உண்டா குமோ தெரியவில்லை.

நம் முன்னேர்கள் எவ்வாறிருந்தனர்? நாம் இப்போது எவ்வாறிருக்கிறேம்? என்பதைச் சிறிது நேரமாவது சிந் திக்கவேண்டாமா? அவர்கள் நல்ல உடல் நலத்துடன் 70, 80 வயதுவரை உயிரோடு இருந்தார்கள். நம்மில் பலரை 20, 30 வயதுக்குள்ளாகவே யமன் வந்து அழைத்துவிடுகின் ருன். நம் முன்னேர் யானை போன்ற பலமும், புலி போன்ற வீரமும் உள்ள குழந்தைகளைப் பெற்ருர்கள் நாமோ பூனைக்குட்டி நாய்க்குட்டிகளைப் போன்ற குழந்தை களைப் பெறுகின்றேம். இதற்குக்காரணம் கண்டுபிடிக்க வேண்டாமா? காரணத்தை அறியத்தேடி அலையவேண் டாம், நம் கண் முன்னுல்தான் நன்ருகத் தெரிகிறதே! அதுதான் தற்கால நாகரீகம். வி. என். குமாரசாமி.

K. R. & SONS,

BIG BAZAAR ST, : : COIMBATORE.

குருகுல நிகழ்ச்சிகள்

இந்துமத பாடசாலையின் 4-ஆம் சுற்றுப்பயணம்

(இதழ் 6 பக்கம் 32ன் தொடர்ச்சி)

தலைவர் முடிவுரையில் கூறியதின் சுருக்கம்:— உரிமை இந்தியாவில் நல்ல ஆட்சியை நடத்தத் தகுந்தவர்களை இந்துமத பாடசாலை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. மக்கள் நல்ல உடல் நலமுள்ளவர்களாகவும், அறிவு வளமுள்ளவர்களாகவும் வளர்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் இந்துமத பாடசாலையில் உள்ளன. பாடசாலையிலிருந்து சுற்றுப்பயணம் செய்வது பல ஊர் மக்களுக்கும் பெரு நன்மை செய்கிறது. அவர்களுக்கு ஆங்காங்கு வேண்டிய உதவிகளெல்லாம் செய்யவேண்டியது பொது மக்களுடைய கடமையாகும். நம் ஊரில் அவர்களுக்கு எல்லா வசதிகளும் செய்து கொடுத்துள்ள உயர்திரு. சண்முக முதலியார் அவர்கள் குடும்பத்தினர்க்கு வேலூர் நகராண் கழகத்தின் சார்பில் பெரிதும் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வேலூர் வியாபாரிகள் சங்கச் செயலாளர் உயர்திரு. என். அண்ணாமலை அவர்கள் பொதுக்கூட்டத்தில் சிறிது நேரம் பேசித் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டனர்.

குடியேற்றம்

8-5-49 இரவு உணவு கொண்டதும் வேலூரிலிருந்து புறப்பட்டோம். உயர்திரு. இராஜகோபால் நாயுடு அவர்கள் தமது பேருந்து வண்டியை (பஸ்ஸை) எங்கட்கு உதவினர். அவர்களுடைய உதவியினால் அன்றிரவே எல்லாரும் குடியேற்றம் போய்ச் சேர்ந்தோம்.

வட ஆர்க்காடு மாவட்டத்திற்கே பெருமை தந்து கொண்டிருக்கிற திருமகள் நூல் ஆலை குடியேற்றத்தில்தான் அமைந்துள்ளது. பரந்த இடத்தில் உயர்ந்த முறையில் நல்ல வசதிகளுடன் அமைந்துள்ளது அத் திருமகள் நூல் ஆலை.

திருமகள் நூல் ஆலையை நடத்தும் தலைவர் உயர்திரு. கா. அ. சண்முக முதலியார் அவர்கள் நற்பண்புகளுடைய நல்லார். ஒழுக்கம் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்துவரும் உயர்ந்தவர். இறை வழிபாட்டில் உண்மைப் பற்றுக்கொண்டு சிறந்து விளங்குவபர்.

உலகியலை நன்கு அறிந்தவர். அப்பெரியார் எங்களை அன்புடன் வரவேற்றார். திருமகள் நூல் ஆலை மாளிகையில் நாங்கள் தங்க ஏற்பாடு செய்தார். இரண்டு நாட்களும் எல்லா வசதிகளோடும் அங்குத் தங்கியிருந்தோம். ஒவ்வொரு வேளையும் நாங்கள் உணவு உண்ணும் பொழுது அப்பெரியார் எங்களுடன் இருந்தது எங்களுக்குப் பெருமகிழ்ச்சி தந்தது.

9-5-49 திங்கட்கிழமை அன்று மாணவர்கள் யாவரும் ஆசிரியர்களுடன் நூல் ஆலையைப் பார்த்தார்கள். பஞ்சைத் துப்புரவாக்குவதையும், பட்டை போடுவதையும், நூலாகத்திரிப்பதையும், நூலைப் பொந்துகளாகச் சேர்ப்பதையும், பொந்துக்களைக் கட்டுகளாக்குவதையும், கட்டுகளைப் பெரிய பேல்களாகக் கட்டி முடிப்பதையும் நேரிலேயே கண்டார்கள்.

குடியேற்றத்தைச் சேர்ந்த நெல்லூர் பேட்டையில் சிவபெருமான் திருக்கோயிலில் அப்பொழுது திருவிழா நடந்து கொண்டிருந்தது. இரவு உணவிற்குப்பின்னர் எல்லோரும் நெல்லூர்ப்பேட்டைக்குச் சென்றோம். நமது பாடசாலையின்பால் பல ஆண்டுகளாகப் பற்றுள்ளம் கொண்டுள்ளவரும், அவ்வப்போது பாடசாலைக்குப் பல வகைகளிலும் உதவிவருபவருமான உயர் திரு. மா. வே. சுவாமிநாத முதலியார் அவர்கள் எங்களை வரவேற்றார்கள். திருக்கோயில் வழிபாடு செய்தோம். பின்னர் உயர் திரு மா. வே. துரைசாமி முதலியார் அவர்கள் திருமாளிகையின் முன்பு சென்றோம். நாலாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் அங்கு கூடினர். அங்கு மாணவர்களுடைய வலிமைக்காட்சிகளும், அறிவுக்காட்சிகளும் செய்து காட்டப்பட்டன. தலைமை ஏற்ற பெரியார் உயர்திரு கா. அ. சண்முக முதலியார் அவர்கள் யாவரையும் வாழ்த்தினர்.

இரவு குடியேற்றம் சென்று விருந்தினர் மாளிகையில் உறங்கினோம். மறுநாள் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு சிற்றுண்டியும் உண்டு, நெல்லூர்ப்பேட்டை சென்றோம். பகலில் அம்பலவாணரைத் திருக்கோயிலில் வழிபட்டோம். பின்னர் நெல்லூர்ப் பேட்டை உயர்திரு. சின்னதம்பி முதலியார் அவர்களும், அவரது உடன் பிறந்தார்களும் எங்களுக்கு ஏற்பாடு செய்திருந்த நல்லுணவை உண்டோம். முகமலர்ச்சியோடும், அன்புள்ளத்தோடும் எங்களுக்கு நல்லுணவு அளித்து மகிழ்ந்த பெருமக்களை வாழ்த்தினோம்.

நண்பகல் உணவுக்குப்பின் உயர்திரு. துரைசாமி முதலியார் அவர்கள் மேல்மாடியில் ஓய்வு எடுத்துக்கொண்டோம். மாலை ஐந்து மணிக்கு அங்கிருந்து புறப்பட்டுப் பாண்டு இசையுடன் ஊர்வலமாகப் பிச்சனூரில் உள்ள நகராண்கழக உயர்நிலைத் தொடக்கப்பள்ளிக்குச் சென்றோம். திருமகள் ஆலையிலிருந்து செய்து அனுப்பிய அத்திக்காய்ப்பணியாரத்தை ஆர்வமுடன்

உண்டோம். மிகுந்த பொருட் செலவில் செய்யப்பட்ட போதி லும் எல்லாக் குழந்தைகளும் போதும், போதும் என்று உண்டு மகிழும் அளவில் அப்பணியாரம் அனுப்பப் பெற்றிருந்தது.

குடியேற்றம் நகராண் கழகத்தலைவர் உயர்திரு. பு. கா. கங்காதர முதலியார் அவர்கள் வாலாஜாபாத் பாடசாலைக்கு வருகை புரிந்துள்ளார்கள். பாடசாலையின்பால் அன்புடையவர் கள். பிச்சனூரில் கூட்டம் நடத்துவதற்காக அவர்கள் சிறந்த ஏற்பாடுகள செய்தார்கள். விளம்பர அழைப்பு ஆயிரக்கணக்கில் அச்சிட்டுப் பொதுமக்களுக்கு வழங்கினர்கள். கரும்பலகைகளில் எழுதிப் பொதுவிடங்களில் வைத்தார்கள். நகராண் கழகப் பாடசாலைகளில் எல்லா ஆசிரியர்களும் மாணவ மாணவிகளும் கூட்டத்திற்கு வரும்படி ஏற்பாடுகள் செய்தார்கள்.

மாலை 6-மணிக்குக்கூட்டம் தொடங்கியது. ஒலிபெருக்கியும் அமைக்கப்பட்டிருந்தது. பெருங்கூட்டமாக இருந்தும் எல்லா ரும் நன்கு கேட்டனர். கூட்டத்திற்கு நகராண்கழகத் தலைவரவர் கள் தலைமை ஏற்றூர்கள். இந்துமத பாடசாலை வாயிலாக உயிர் ஒப்பந்தம் செய்திருந்த பல பெரியார்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். திருக்குறள் பரிசுக்காக ரூ 500 முதற் பொருள் வைத்துள்ள உயர்திரு. சின்னப்பா முதலியார் அவர்களும வந்திருந்தனர்.

மாணவர்களுடைய விளையாட்டுக்களையும், நடிப்புக்களையும் பேச்சுக்களையும, பாட்டுக்களையும் யாவரும் கண்டும், கேட்டும் மகிழ்ந்தனர். பின்னர் அங்கு வந்திருந்தவர்களில் சிலர் தங்கள் கருத்துக்களை எடுத்துப் பேசினர்கள்.

தமிழ் ஆசிரியர் திருவாளர் கிருஷ்ணசாமி ரெட்டியார்: "ஏட் டிலே படித்த குருகுல நிகழ்ச்சி முறைகளை நேரிலே காணும் பேறு கிடைத்தது. வாலாஜாபாத் இந்துமத பாடசாலையை ஒரு 'குட்டி உலகம்' என்றே கூறலாம். உலகில் மனிதன் எப்படி நடந்துகொள்ள வேண்டும். எந்த முறையில் வாழ வேண்டும் என்றெல்லாம் அவர்களுக்குக் கற்பிக்கப்படுகிறது. மாணவர்கள் கல்வியில் மட்டுமின்றி, உடற்பயிற்சியிலும், நடிப்பிலும் திறமை பெற்றுள்ளதைப் பாராட்டுகிறேன். (திருவிழாக்காலத்தில்) கட வுள், கோயிலுக்கு வாராத மக்களைத் தாமே தேடிவந்து அருள் புரிவது போல இம்மாணவர்கள் இன்று நம்மை மகிழ்வித்தார் கள். இம்மாதிரிப் பள்ளிகளும், இல்லங்களும் தாலுக்காவுககு ஒன்ருவது தோன்ற வேண்டும்."

கல்விச்சாலைகளின் ஆய்வர் உயர்திரு. கே. வி. சிவசுப்பிர மணியம் அவர்கள: "வாலாஜாபாத் பாடசாலையிலிருந்து எழுபது அணுக்கள் கொண்ட சக்தி ஒன்று வந்து நம்மைச் செயலற்ற முறையில் ஆழ்த்தி விட்டது. அட்டாவதானம், தசாவதானம்

செய்வதுபோல் ஒரு மாணவனே உடற்பயிற்சி, பேச்சு, நடிப்பு அனைத்திலும் கலந்து கொள்ளுவது வியப்பையூட்டுகிறது. இவ்வளவு நன்முக மாணவர்களைத் தயார் செய்த பள்ளி ஆசிரியர்களின் திறத்தை நான் நன்கு உணர்கின்றேன்."

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிகளிலும் 'வித்துவான்' பட்டம் பெற்றுள்ள உயர்திரு. வேங்கடராஜலு ரெட்டியார் அவர்கள்: "இம்மாணவரின் உடற்பயிற்சி, நடிப்புத்திறன் ஆகியவற்றைக் கண்டபின், யாரை வியப்பதென்றே எனக்குத் தோன்றவில்லை. இந்துமத பாடசாலையின் தலைவர் திரு. முதலியாரையா? அல்லது அப்பள்ளியை ஒழுங்காக நடத்திவருகின்ற ஆசிரியர்களையா? அல்லது ஆசிரியர்களின் சொற்படி நடந்து கொள்ளுகின்ற மாணவர்களையா? யாரை வியப்பது! நான் ஒரு முறை வாலாஜாபாத்திற்குச் சென்றேன். பாடசாலையை நேரிற் கண்டேன். பாடசாலையின் சார்பிலுள்ள வள்ளலார் மாணவர் இல்லத்தை நடத்தும் 10 அமைச்சர்களுடைய செயல்களையும் கண்டேன். நிகழ்ச்சிநிரலில் உள்ளபடி யாவும் ஒழுங்காக நடைபெறுகின்றன. மாணவர்கள் பிற்காலத்திற்குப் பயன்படும் முறையிலே வளர்கின்றார்கள்."

தலைமை ஏற்ற பெரியார், குடியேற்றம் நகராண்கழகத் தலைவரும், உயர் நிலைப்பள்ளிக்கட்டிடக் கழகத்தின் தலைவருமான உயர்திரு. பு. கா. கங்காதர முதலியார் அவர்கள்; "வாலாஜாபாத் குருகுலம் நாட்டிற்கு உண்மையான தொண்டு செய்து வருகிறது. கல்விக்குச் செய்யப்படுகிற அறமே நாட்டில் மிகத் தேவையாக இருக்கிறது. வாலாஜாபாத் குருகுலத்திற்கு உதவி செய்வதோடு அதைப் போன்ற குருகுலங்கள் பல ஏற்படும்படி செய்தால் நாட்டுப் பற்றுடைய ஒவ்வொருவருடைய கடமையாகும். இந்துமத பாடசாலை நாளுக்கு நாள் ஓங்கி வளரவும், இச்சுற்றுப் பயணத்தார் வெற்றியுடன் மேற் செல்லவும் எல்லாம்வல்ல பெருமானை வேண்டுகிறேன்."

சுற்றுப் பயணத்தார் சார்பில் குடியேற்றத்தில் உதவியாயிருந்த யாவருக்கும நன்றி செலுத்தினேம். குடியேற்றத்தில் வேதாந்தத் தமிழ் வாசக சாலையை தோற்றுவித்து நடத்திவருகிறவரும், குடியேற்றத்தில் உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிடம் ஒன்று கட்ட மின்னின்று முடித்துவருப்வரும் குடியேற்றம் நகராண் கழகத் தலைவருமான எங்களுக்கு உடனிருந்து பொதுக் கூட்ட ஏற்பாடுகளை யெல்லாம் செய்த உயர் திரு பு. கா. கங்காதர முதலியார் அவர்களுக்கும், எங்களுக்குப் பேருதவியாயிருந்த நகராண் கழகப் பாடசாலையின் ஆசிரியர் முதலாக எல்லாப் பெரியோர்களுக்கும், இடம், உணவு முதலிய ஏற்பாடு செய்துதந்த திருமகள் நூல் ஆலையார்க்கும் நன்றி தெரிவித்துக் கொண்டோம். பின்னர் கூட்டம் இனிது நிறைவேறியது

கூட்டம் முடிந்த பிறகு திருமகள் நூல் ஆலைக்குச் சென்று உணவுகொண்டோம். பின்னர் நாங்கள் யாவரும் ஒன்றுகக்கூடி பெரியார் உயர்திரு கா. அ. சண்முக முதலியார் அவர்களுடைய அறிவுகலந்த வாழ்த்துரைகளைப் பெற்றோம்.

"உலகத்தில் நல்லவர்களாக வாழ்வதற்கு ஒவ்வொருவரும் விரும்பவேண்டும். சிறுவர்களாகிய நீங்கள் பொய் வஞ்சனை முதலிய இல்லாமல் இருக்கிறீர்கள். இப்படியே வளர்ந்தால், பெரியவர்களாகிறபோது, நாட்டிற்கு நல்ல குடிமக்களாகவிளங்கு வீர்கள். உலகில் நல்ல மனப்பான்மையுடைய மக்கள் இருந் தால் தான் மழை பொழியும். நீங்கள் எல்லாரும் நல்லவர்களா கச் சிறப்பீர்களாக" என்று கூறினர் உயர்திரு பெரியார் அவர் கள்.

வாணியம்பாடி

இரவு மணி 10-30 ஆயிற்று. உயர்திரு இராஜகோபால நாயுடு அவர்களின் பேருந்துவண்டி வந்தது. அதில் புறப்பட்டு இரவு 12-30 மணிக்கு வாணியம்பாடி போய்ச்சேர்ந்தோம். வாணியம்பாடியில் உயர்திரு, விசுவநாத முதலியார் அவர்களும், முனிரத்தின முதலியார் அவர்களும் நாங்கள் அங்குத் தங்குவ தற்கு அவ்வூரின் இஸ்லாமியா உயர்நிலைப் பள்ளியை ஏற்பாடு செய்திருந்தார்கள். உயர்ந்து அழகிய காட்சியைத் தந்து கொண்டிருக்கும் அக் கல்விச் சாலையில் தங்கியது எங்கட்கு மகிழ்ச்சியாயிருந்தது. மகம்மதியப் பெரியார்கள் பலர் சேர்ந்து, பொருள் சேர்த்து, குழந்தைகள் கல்விக்காகச் செய்திருக்கும் அந்த அரும்பணி யாவராலும் பாராட்டற்குரியது; பாராட்டிப் பின் பற்றக் கூடியது.

மிட்டாதார் உயர்திரு. கோவிந்தராஜ முதலியார் அவர்கள் பொருட் செலவில் வாணியம்பாடியில் எங்களுக்கு உணவு அளிக் கப்பட்டது

மாலையில் சிற்றுண்டிக்குப் பிறகு இஸ்லாமியா உயர்நிலைப் பள்ளியில் கூட்டம் ஒன்று நடத்தினோம். கூட்டத்திற்குத் தலைமை ஏற்றவர் அன்றுதான் அவ்வூருக்கு வந்து நகராண் கழ கத்திற்கு ஆணையாளராகப் பொறுப்பேற்றுக் கொண்ட உயர் திரு ஈ. வே. சோமசுந்தரம், B. A., Pand P. A. (Dip) அவர்கள்.

கூட்டம் தொடங்கியதும் உயர்திரு. விசுவநாத முதலியார் அவர்கள் வந்திருந்த பெருமக்களை வரவேற்றுப் பேசினர். "பத்து ஆண்டுகட்குமுன் வாலாஜாபாத் இந்துமத பாடசாலை யை நான் நேரிற் கண்டேன். அதிலிருந்து அதன் வளர்ச்சியில் கருத்துவைத்து வருகிறேன். மாணவர்களே அல்லாமல் பெரி யோர்களும் வாலாஜாபாத்திற்குப் போய் வந்தால் நல்லவர்க ளாகி விடுவார்கள். சில நாட்களுக்கு முன் அப்பள்ளியின்

ஆண்டு விழா நடந்தபோது அதற்குத் தலைமை யேற்ற ஜனப் ஹாஜி அப்துல் ரஹிமான் பகதூர் அவர்கள் பாடசாலைக்கு ரூ. 5000-0-0 நன்கொடை யளிக்க இசைந்ததாகச் செய்தித் தாளில் படித்து மகிழ்ந்தேன். அப்பாடசாலை மாணவர்களின் நிகழ்ச்சியைப் பார்வையிடவந்தவர்களைப் பாராட்டி வரவேற்கின் றேன்" என்று அவர் பேசினர்.

மாணவர்கள் நிகழ்ச்சிகள் எல்லாம் முடிந்தன. தலைவர் தம் முடிவுரையில் மாணவர்களெல்லாம் உண்மையிலேயே நல்லவர்க ளென்றும், அவர்களெல்லாம் நன்கு வாழ வேண்டுமென்றும் சொல்லி வாழ்த்தினர். கூட்டத்திற்கு வாணியம்பாடியின் பெரு மக்களிற் பலர் கலந்துகொண்டது மகிழ்ச்சி தந்தது.

திருப்பத்தூர்

12—5—49 விடியற்காலை யாவரும் எழுந்தோம். தொடர் வண்டி நிலையம் (Railway Station) சென்றோம். தொடர்வண்டி வழியாக நாங்கள் திருப்பத்தூர் சென்றோம்.

திருப்பத்தூரில் உயர்திரு. கா. அ. ஷண்முக முதலியார் அவர்களுடையபுதல்வர்கள் எங்களைவரவேற்றுத்தங்கள் திருமா ளிகையில் இடங்கொடுத்து மகிழ்ந்தார்கள். உயர்திரு. கா அ. ஷ. பத்மனப முதலியார் அவர்களும் திரு. இரகுநாயகம் பி. ஒ. எல். அவர்களும் உயர்திரு. டி. பி. கோவிந்தசாமி முதலியார் அவர்களும் எங்களை வரவேற்று, எங்களுக்கு விருந்தளித்து, எங்களுக்கு வேண்டிய எல்லாவற்றையும் புரிந்து மகிழ்ந்தார்கள்.

மாலைச் சிற்றுண்டிக்குப் பிறகு அவ்வூர் வழக்குரைஞர் உயர் திரு இராகவேந்திர ஆச்சாரியார் அவர்களின் தலைமையில் நக ராட்சிக் கழக உயர்நிலைப்பள்ளி இடத்தில் கூட்டம் நடத்தினேம். தலைவர் தமது முன்னுரையில் இந்துமத பாடசாலையின் வளர்ச் சியைத் தான் செய்தித் தாள்கள் வாயிலாகவும், பள்ளியின் வெளியீடாகிய குருகுலத்தின் வாயிலாகவும் அறிந்துகொண்டு வருவதாகவும், அதன் வளர்ச்சி தமக்கு மகிழ்ச்சி தருவதாகவும் தெரிவித்தார். திருப்பத்தூர் தியாகி குமரன் உடற்பயிற்சிக் கழகத்தார் எங்களுக்கு வரவேற்புகள் வாசித்துக் கொடுத்தார்.

பின்னர் மாணவர்களுடைய முயற்சிகளை யெல்லாம் பலரும் கண்டு மகிழ்ந்தார்கள்.

தமிழ்ப்புலவர் பெரியசாமிப் பிள்ளை அவர்கள் முதலில் எங் களை வாழ்த்திப்பேசினர். "இந்துமத பாடசாலையின் கல்வித் திட் டம்நமதுநாட்டிற்குப்பெரும்நன்மையைத்தந்துகொண்டிருக்கிறது நம் ஊருக்கு அவர்கள் வந்ததே நாம் செய்த ஒரு பேறு ஆகும்." என்று கூறி வாழ்த்தினர்.

தலைவர் முடிவுரையில் "குழந்தைகளுடைய பல வகையான பயிற்சிகளைப் பார்த்தோம் அவைகள் யாவுமே நன்ருக இருக்கினறன. உடல் அறிவு, உணர்வு, என்பன எல்லாம் ஒருங்கே வளர்க்கப்படுகின்றன. குழந்தைகளோடு குழந்தைகளுக்காக உயிர் வாழ்ந்துகொண்டிருக்கும் பாடசாலையின் தலைவர் அவர்களையும், ஆசிரியப் பெருமக்களையும் நான் பாராட்டுகின்றேன்." என்று கூறினர்.

நன்றி கூறிய பிறகு கூட்டம் இனிது நிறைவேறியது.

இரவு உணவுக்குப் பின்னர் எங்களை அனைவரையும் உயர்திரு குமரன உடற் பயிற்சிக் கழகத்தார் தங்கள் இடத்திற்கு அழைத்துச் சென்ருர்கள்; தங்களுடைய பல வகையான பயிற்சிகளையும் எங்களுக்குச் செய்து காட்டினர்கள். உயர்ந்த நோக்கங்களுடனும், நல்ல முறைகளுடனும் அவர்கள் பெற்றிருந்த பயிற்சிகளெல்லாம் எங்களுக்கு உண்மையிலேயே ஊக்கம் மிகத் தந்தன.

குடியேற்றத்தில் எங்களுக்குப் பேருதவியாக இருந்தவரும் இந்துமத பாடசாலையைக் கண்ணுங் கருத்துமாகத் தாம பார்த்துக் கொளளுவதோடு, பிறரையும் அதற்கு உதவும் வண்ணம் செய்தவருமான உயர்திரு மா. வே. சுவாமிநாத முதலியார் அவர்கள் திருப்பத்தூரிலும் வந்து எங்களோடு கலந்துகொண்டது எங்களுக்குப் பெரு மகிழ்ச்சி தந்தது.

இரவு பெரியார் உயர்திரு. கா, அ. ஷண்முக முதலியார் அவர்கள் திருமாளிகையிலே தங்கினேம்.

சேலம்

மறுநாள் (13-5-49) விடியற்காலை எழுந்து, காலைக்கடன்களை முடித்துக்கொண்டு, காலைச் சிற்றுண்டிக்குவேண்டிய புளிச்சோறு, தயிர்ச்சோறு முதலியவற்றை எடுத்துக்கொண்டு தொடர்வண்டி வழியாகச் சேலம் சென்றேம்.

சேலத்தில் குகையில் ஜவுளிவாணிபம் புரிந்துவரும் உயர் திரு. கே. ஆர். சி. சென்னி செட்டியார் அவர்களும், அவரது உடன் பிறந்தார்களும் வாலாஜாபாத பாடசாலையின்பால் பல்லாண்டுகளாக நல்லகருத்துள்ளவர்கள். அவர்களுடைய குழந்தைகள் வாலாஜாபாத் மாணவர் இல்லத்தில் படித்தவர்கள் என்பதும் குறிப்பிடத் தக்கது.

சேலத்தில் அரண்மனைப் படக்காட்சி சாலை (Palace Theatre) என்ற பெயரில் உயர்ந்த படக்காட்சி சாலை ஒன்றை அமைத்து திறமையுடன் நடத்திவருபவரும் குகையில் துணி வாணிபம் புக ழுடன் செய்து வருபவருமான உயர்திரு. பி. எஸ். எஸ். பொம் மண்ண செட்டியார் அவர்களும் நமது குழந்தைகளை வாலாஜா பாத் குருகுலத்திற்கு அனுப்பியிருந்தவர்கள்.

உயர்திரு. கே. ஆர். சி. சென்னி செட்டியார் அவர்களுடைய இடத்தில் தங்கினேம். அவர்களது வீட்டிலேயே உணவு கொண்டோம். பிற இடங்களில் செய்ததுபோல் சமையல்காரர்களைக் கொண்டு செய்யாது, அவர்கள் வீட்டுத் தாய்மார்கள் உள்ளன்போடு செய்தளித்த விருந்து மறக்க முடியாது.

அன்று மாலை சிற்றுண்டிக்குப் பிறகு குகையின் தெருக்கள் வழியே பாண்டு இசையுடன் ஊர்வலமாகச் சென்றேம். பொது நலப் பிரியர் சங்கத்தின் இடத்தைச் சேர்ந்தோம். அங்குக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சேலம் வழக்குரைஞர் உயர்திரு. எஸ். இராமசாமி ரெட்டியார், பி. ஏ., பார்-அட்லா., அவர்கள் தலைமை ஏற்றுர்கள்.

ஆண்களும் பெண்களுமாக ஆயிரக் கணக்கில் கூட்டம் கூடினர். அவர்கள் யாவரும் மாணவர்களுடைய உடற்பயிற்சிகளையும். வலிமைக் காட்சிகளையும், நடிப்பு முதலியவைகளையும் பார்த்து மகிழ்ந்தார்கள்.

தலைவர் முடிவுரை கூறுகையில், தாம் பல பள்ளிகளைப் பார்வையிட்டிருப்பதாகவும் அவைகளுக்கும் வாலாஜாபாத் பாடசாலைக்கும் வேற்றுமைகள் பல இருப்பதாகவும் சொன்னர். குருகுலங்களில் மாணவர்கள் தங்கிக் கல்வியுடன் ஒழுக்கம் கற்பது தான் நல்லது என்றும், வாலாஜாபாத் குருகுலத்தைப் போல் பல குருகுலங்கள் நாடெங்கும தோன்ற வேண்டுமென்றும் சொன்னுர்கள்.

இரவு திரு. சென்னி செட்டியார் அவர்கள் இடத்திலேயே உறங்கினேம்.

மறுநாள் 14-5-49 அன்று உயர்திரு பி. எஸ். எஸ். பொம்மண்ண செட்டியார் அவர்கள் விருந்ினராக இருந்தோம். அன்று மாலை சேலம் நகராட்சிக் கல்லூரியில் ஒருகூட்டம் நடத்தினேம். கூட்டம் நடத்தற்கு வேண்டிய வசதிகளெல்லாம் கல்லூரித் தலைவர் உயர்திரு ஓ. இராமசாமி கவுண்டர், எம். ஏ, எல். டி., அவர்களும் செய்து தந்தார்கள். கூட்டத்திற்கு மாவட்ட நடுவர் (ஜில்லா ஜட்ஜ்) உயர்திரு. கே. எஸ். வெங்கட்டராமன், எம். ஏ., ஐ. சி. எஸ்., அவர்கள் தலைமை ஏற்றுர்கள்.

மாவட்டக் கழகப் பொறியர் (என்ஜினீயர்) உயர்திரு. ஓ. சிவ சங்கரன், பி. ஈ., அவர்களும் ஜவஹர் நூல் ஆலை உரிமையாளர் உயர்திரு எம். ஏ. பழனியப்ப செட்டியார் அவர்களும், உயர்திரு. டாக்டர் அ. குமாரசாமி, பி. ஏ., எம். பி. பி. எஸ்., எல். ஓ. முதலியவர்களும் கூட்டத்திற்கு வருகை புரிந்தார்கள்.

உங்கள் மோட்டார் கார்களை

இன்சூரன்சு செய்யுங்கள்!

மிட்லண்டு இன்சூரன்சு கம்பெனி மோட்டார் கார்களை இன்சூர் செய்கிறது. நான் அக்கம்பெனியில் ஏஜண்டாக இருக்கிறேன். உங்கள் கார்களை என் மூலமாக இன்சூர் செய்யுங்கள். அதனுல் எனக்குக் கிடைக்கும் கமிஷன் தொகையை இந்துமத பாடசாலைக்கும் வள்ளலார் இல்லத்துக்கும் பயன் படுத்துகிருேம். எனவே என்மூலமாக இன்சூர் செய்து கொள்ளுதலால் இந்து மதபாடசாலையில் படிக்கும் 750 சிறுவர் சிறுமிகட்கும், வள்ளலார் இல்லத்தின் 550 குழந்தைகளுக்கும் உதவி செய்தவராகிறீர்கள்.

தங்கள் கார் இன்சூரன்சு முடிவாகிற தேதியை எனக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன். அல்லது என் பெயரிட்டு மிட்லண்டு கம்பெனிக்கே ஒரு கார்டு எழுத வேண்டுகிறேன். கார் இன்சூரன்சு சம்பந்தமானவைகளை யெல்லாம் அவர்களே செய்து வைப்பார்கள்.

வா. தி. மாசிலாமணி பிரதிநிதி
மிட்லண்டு இன்சூரன்சு கம்பெனி,
13-14 சகிண்டு லைன் பீச்சு, சென்னை.

குருகுலத்தின்பால் பற்றுக்கொண்டுள்ள அன்பர்களுக்கு ஓர் விண்ணப்பம்

—

கல்விபால் கருத்துடைய பெருமக்களே!

வாலாஜாபாத்தில் 34-ஆண்டுகளாக நடைபெற்று வருவது இந்துமதபாடசாலை. அதன் சார்பில் அமைந்து பல ஏழை மாணவர்களுக்கு உணவும் இடமும் அளித்து வருவது வள்ளலார் மாணவர் இல்லம். பாடசாலையில் இன்று 750 சிறுவர் சிறுமியர் கல்வி கற்று வருகிருர்கள். மாணவர் இல்லத்தில் 550 குழந்தைகள் இக்குருகுலத்தைப்பற்றிப் பல திறத்தாரும் போற்றிக் கூறுகிருர்கள்.

நமது (பத்திரிகை) குருகுலத்திற்கு ஒரு ஆண்டு முடிந்து இரண்டாவது ஆண்டு நடக்கிறது. இன்னும் பலர் தங்கள் சந்தாத்தொகைகளை அனுப்பாமலிருக்கின்றனர். பெருமக்கள் தங்கள் சந்தாத் தொகைகளை அனுப்புவதோடு குருகுலம் அனுப்புதற்கு புது முகவரிகளையும் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளுகிருேம்.

ஆண்டு கட்டணம்	**ரூ. 2 0 0**
3 ஆண்டுகளுக்குச் சேர்த்து	**ரூ. 5 0 0**
ஆயுள் கட்டணம்	**ரூ. 25 0 0**

—வா. தி. மாசிலாமணி, இந்துமதபாடசாலை.

ஸ்ரீ லோபமுத்ரா வீவிங் மில்ஸ் லிமிடெட்,

ஏற்படுத்தப்பட்ட மூலதனம்: ரூ. 5,00,000

பங்கு ஒன்றுக்கு ரூ. 100/-வீதம் 5,000 பங்குகள்.

வெளியிடப்பட்ட மூலதனம்: ரூ. 5,00,000

பங்கு ஒன்றுக்கு ரூ. 100/-வீதம் 5,000 பங்குகள்.

பங்குத்தொகை செலுத்தும் விதம்

பங்கு விண்ணப்பத்துடன் பங்கு ஒன்றுக்கு ரூ. 25/-வீதமும். பங்கு அலாட் ஆன ஒரு மாதத்திற்குள் பங்கு ஒன்றுக்கு ரூ. 25/-வீதமும், பாக்கித் துகையை டைரக்டர்கள் வேண்டும்போதும் செலுத்தவேண்டும்.

டைரக்டர்கள்

1. ரு. தி. பெருமாள் செட்டியார். நூல் & ஜவுளி வியாபாரம், பவானி. டைரக்டர். T. V. G. R. M. K. Ltd., சிதம்பரம்.
2. V. R. A. மாணிக்க முதலியார், நூல் & ஜவுளி வியாபாரம், ஈரோடு. டைரக்டர் T. V. G. R. M, K. Ltd.
3. K. பெரியசாமி நூல் & ஜவுளி வியாபாரம், கரூர்.
4. A. மாரியப்ப முதலியார், நூல் வியாபாரம், & வீவிங் பாக்டரி, கரூர்.
5. A. கந்தசாமி முதலியார், நூல் & ஜவுளி வியாபாரம், ஈரோடு.
6. A. ஆறுமுகம், நூல் வியாபாரம் & நிட்டிங் பாக்டரி, கரூர்.
7. V. V. C. R. முருகேச முதலியார், நூல் வியாபாரம், ஈரோடு.
   டைரக்டர்:
   1. தி மாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட், சேலம்.
   2. T. V. G. R. M. K. Ltd.. சிதம்பரம்.
   3. Air, Steamer & General Agencies Ltd., Tuticorin.
   4. The India Motors and Theatres Ltd., Tirunelveli.
8. T. R. சுந்தரம், B. A., B. SC. (Leeds) சேலம், மானேஜிங் டைரக்டர், தி மாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட், சேலம். டைரக்டர். T. V. G. R. M. K. Ltd., சிதம்பரம்.
9. M. S. கோவிந்தராஜுலு செட்டியார், நூல் & ஜவுளி, வியாபாரம், கரூர்.

பாங்கர்கள்

1. இம்பீரியல் பாங்கு ஆப் இந்தியா, ஈரோடு & மதுரை.
2. இந்தியன் பாங்கு லிமிடெட், ஈரோடு. & மதுரை.

ஆடிட்டர்கள்

மெசர்ஸ்: M. S. கிருஷ்ணசுவாமி & ஜகன்னாதன், ரிஜிஸ்டர்ட் அக்கௌன்ட்டன்ட்ஸ், R. S. புரம், கோயமுத்தூர்.

மானேஜிங் ஏஜண்ட்

ஸ்ரீ V. V. C. R. முருகேச முதலியார், நூல் வியாபாரம், ஈரோடு.

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: 243, கணபதி ராமலிங்க நிலையம், அருள் ஜோதி வீதி, அடிவாரம், பழனி, மதுரை ஜில்லா.

நோக்கங்கள்: பொதுவாக கம்பெனியின் யதாஸ்தில் கண்டிருக்கும் நோக்கங்களை பூர்த்திசெய்யவும், முக்கியமாக ஓர் நெசவு மில் ஆரம்பித்து நடத்தவும் இக் கம்பெனி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

மனிதனுக்கு உணவுக்கு அடுத்தபடியாக மிகவும் அவசியமான உடைக்குத் தற்சமயம் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி அதிக நாள் நீடித்து இருக்கும் என்று நம்பப்படுகிறது. புதிய கதிர்கள் வைத்து நூற்கும் மில்கள் ஏற்படுத்த சர்க்கார் உத்திரவு கிடைப்பது மிகவும் அரிதாக இருக்கும் வரை நிலைமை இம்மாதிரியேதான் இருக்கும். ஆதலால் நெசவு மில் ஆரம்பிப்பதற்கு இது சரியான தருணமே.

பழனிக்கு வெகு சமீபத்தில் நமது மில் கட்ட ஏற்பாடாகியிருக்கிறது. ஏராளமாக நூல் உற்பத்தியாகும் மதுரைக்குச் சமீபத்தில் மில் ஆரம்பிப்பது மிகவும் அனுகூலமானது. நம் தேவைக்குத் தகுதியான நிலம் வாங்க ஏற்பாடு நடந்துகொண்டிருக்கின்றது. தொழில் நடத்த அவசியமான வேலையாட்கள் இந்த வட்டாரங்களில் ஏராளமாகக் கிடைக்கிறார்கள். கூடிய சீக்கிரம் கம்பெனி வேலை தொடங்கி லாபகர்மாக நடக்குமென்று எதிர்பார்க்கிறோம்.

மானேஜிங் ஏஜண்ட்: 1—7—48ல் இக் கம்பெனிக்கு மானேஜிங் ஏஜண்டாக ஸ்ரீ V. V. C. R. முருகேச முதலியார் அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவருடைய நீண்டகால நூல் வியாபார அனுபவமும், செல்வாக்கும் கம்பெனிக்கு மிகவும் அனுகூலமுள்ளனவாக இருக்கும்.

டைரக்டர்கள்:—டைரக்டர்கள் ஒவ்வொருவரும் தங்கள் பெயரால் குறைந்தபக்ஷம் நூறு பங்குகளை வைத்திருக்கவேண்டும். தாங்கள் ஆஜராகும் ஒவ்வொரு டைரக்டர் மீட்டிங்கிற்கும் சிட்டிங் பீஸாக ரூ. 50/-ம் மீட்டிங்கிற்கு வந்து போக ஏற்படும் நியாயமான பிரயாணச் செலவையும் கைச்செலவையும் ஒவ்வொரு டைரக்டரும் பெறுவார்கள்.

பங்கு சேர்க்கக் கமிஷன்

கம்பெனியின் விதிகளில் பங்குதாரராக சேருவதற்கோ, அல்லது சேருவதாக ஒப்புக்கொள்வதற்கோ, அல்லது வேறு நபர்களை பங்குதாரர்களாகச் சேர்ப்பதற்கோ, ஷை பங்குகளின் தொகையில் 100க்கு ரூ. 5/க்கு அதிகப்படாமல் கமிஷன் கொடுக்க அதிகாரமுண்டு.

பொது: கம்பெனியில் யாதாஸ்து நிர்வாக விதிகள், பிராஸ்பெக்டஸ், மானேஜிங் ஏஜென்ஸி டிராப்ட் ஒப்பந்தம் இவைகளை கம்பெனியின் ரிஜிஸ்தரான ஆபீஸில் ஆபீஸ் நேரங்களில் பார்வையிடலாம்.

கம்பெனியில் பங்குதாரர்களாகச் சேர விரும்புகிறவர்கள் பங்கு ஒன்றுக்கு ரூ. 25 வீதம் கம்பனிக்காவது கம்பனியின் பாங்கர் மூலமாவது விண்ணப்பத்துடன் அனுப்பவேண்டும். விண்ணப்பம் செய்துகொண்டுள்ள பங்குகளையோ அதற்குக் குறைந்த பங்குகளையோ அலாட் செய்ய டைரக்டர்களுக்கு அதிகாரமுண்டு. பங்குகளை அலாட் செய்ய மறுப்பதற்கு டைரக்டர்கள் ஒரு காரணமும் சொல்லக் கடமைப்பட்டவர்களல்ல. பங்குகள் பூராவும் அலாட் செய்ய மறுத்துவிட்டால், விண்ணப்பதார் செலுத்தியிருக்கும் பூரா தொகையையும் விண்ணப்பதார் செலவில் திருப்பி அனுப்பப்படும். கேட்டுக்கொண்ட பங்குகளுக்குக் குறைவாக அலாட் செய்தால், அலாட் ஆகாத பங்குகளுக்கு செலுத்தப்பட்ட தொகையை அலாட் செய்த பங்குகளுக்குச் செலுத்தவேண்டிய அலாட்மெண்ட் தொகைக்கு வரவு வைத்துக்கொண்டு, மீதித்தொகை யிருந்தால் அதை விண்ணப்பதாரருக்கு அவருடைய செலவில் திருப்பி அனுப்பப்படும்.

V. V. C. R. முருகேச முதலியார்,

மானேஜிங் ஏஜண்ட்.

இஃது விளம்பரம்: பிரகடனம் அல்ல.

மாணவர் இல்லம் கட்டுகிறோம்.

மாண்புடன் உதவ வேண்டுகிறோம்.

தோற்றுவாய் 1916 ஆம் ஆண்டில், இன்றைக்கு 34 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கியது இந்துமத பாடசாலை. இதன் சார்பில் அமைந்து நன்கு நடைபெற்று வருவது வள்ளலார் மாணவர் இல்லம்.

பள்ளிக் கட்டிடம் பாடசாலையில் இன்று 750 சிறுவர் சிறுமியர் கல்வி பயில்கின்றனர். அவர்களுக்கு இதுவரை நிலையான கட்டிடம் ஒன்றுமில்லை. சென்ற ஆண்டில் எட்டு வகுப்பு அறைகளோடு கூடிய ஒரு கட்டிடம் கட்டினோம். அதன் செலவு மதிப்பு ரூ. 32,000. அதில் ஒரு பகுதி அரசியலார் கொடுக்க ஒப்புக் கொண்டுள்ளார்கள். மீதிப்பொருள் ரூ. 16,000 (பதினாறு ஆயிரம்) பெருமக்கள் பலர் உதவினார்கள்.

உதவிசெய்தோர் கோயமுத்தூரைச் சேர்ந்த பூளைமேடு திரு பி. எஸ். ஜி. கங்கா நாயுடு அவர்கள் ரூ 2000ம், சென்னையில் சங்கு மார்க்கு கைலி வாணிபம் புகழுடன் நடத்திவரும் மதரூஸ் பனையகாட் கம்பெனியார் ரூ. 2000ம், அவ்வாணிபக் கழகத்தின் மானேஜிங்டைரக்டரும் திருவாரூர் நகராண் கழகத் தலைவருமான திரு. தி. நா. சபாபதி வள்ளலார் அவர்கள் ரூ. 2000ம், மைசூர் திரு. வி கே. கோவிந்தராஜ முதலியார் அவர்கள் ரூ. 2000ம், புழல் அரிசி வாணிபம் புரிபவரும் அரிசி ஆலை உரிமையாளருமான திரு பொன்னுசாமி கிராமணியார் அவர்கள் ரூ. 2000,ம் வாலாஜாபேட்டை திரு. ஜெயராம செட்டியார் அவர்கள் ரூ. 2000ம். வாலாஜாபாத்தில் அரிசி வாணிபம் புரிபவரும், நடராஜா அரிசி ஆலை உரிமையாளர். திரு. வா. சி. துரைசாமி முதலியார் அவர்கள் ரூ. 2000ம், கடலூர் வருமானவரி கண்காணிப்பாளர் திரு வி. ஜனார்த்தன முதலியார் அவர்களின் காலஞ்சென்ற இளவல் திரு. வி. இராமகிருஷ்ணன் அவர்கள் ரூ. 1000ம், சென்னையில் வித்வான் பாரிப்பாக்கம் திரு. கண்ணப்ப முதலியார் அவர்களைத் தலைவராகக் கொண்ட சென்னை சித்தாந்தப் பிரகாச சபையார் ரூ. 1000ம், ஆகமொத்தம் ரூ. அக்கட்டிடத்திற்கு நன்கொடை உதவினார்கள்.

இல்லக்கட்டிடம் மாணவர் இல்லத்தில் இப்பொழுது 550 சிறுவர்கள் உள்ளனர். இல்லத்திற்கும் 4 கட்டிடங்கள் கட்ட வேண்டியிருக்கின்றது. அவற்றில் ஒன்று ரூ 32000 செலவில் கட்டுதற்குத் தொடங்கியிருக்கிறோம். அரசியலாரும் அச்செலவில் பாதி தருதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். மீதி ரூ. 16000 க்குப்பொதுமக்களை எதிர்பார்க்கிறோம்.

உதவி செய்ய வேண்டுகிறோம் கட்டிடத்தின் தரைப்படம் இதன் முதலில் உள்ளது. அதன் மொத்த செலவு அரசியலார் தருவதுபோக மீதி ரூ. 16000. கட்டிடம் 8 பிரிவுகளாக உள்ளது. ஒவ்வொரு பிரிவுக்கும் ரூ. 2000 ஆகிறது. எனவே ஒருவர் ரூ. 2000 தருவராயின் ஒரு அறையை அவர்பெயராலேயே வழங்குவதெனவும். அவரது திருவுருவப்படத்தோடு அவரைப் பற்றிய விவரங்களை எழுதிவைப்பதெனவும் எண்ணியுள்ளோம்.

உதவும் பெரியோர் சென்னை பெரியமெட்டில் பதனிட்ட தோல்வாணிபம் செய்து வரும் ஜனாப் எம். ஹாஜி. அப்துல் ரஹிமான் சாயபு பகதூர் அவர்கள் ரூ. 4000ம், திரு. முருக கிருபானந்தவாரியார் அவர்கள் ரூ. 2000ம், திருச்சியைச் சேர்ந்த உறையூரில் பெருந்துணி வாணிபம் புரியும் உயர்திரு. ஜெ. முனிசாமி அவர்கள் ரூ. 2000ம், காஞ்சிபுரம் திருக்கச்சி நம்பித்தெரு, பட்டு அண்டு ஜரிகை வாணிபம் புரிந்து வரும் உயர்திரு சே. ரா. ஆதிநாராயண முதலியார் அவர்கள் ரூ. 2000ம், தனவணிக நாட்டைச் சேர்ந்தவரும் கொழும்பில். பெரும் வாணிபம் புரிபவருமான சொக்கநாதபுரம் செ. ரா. வள்ளியப்ப செட்டியாரவர்கள் ரூ. 2000,ம் கைலி நூல் வாணிபம் திரு பி. ஸ்ரீராமுலு செட்டியார் அவர்கள் ரூ. 2000ம், தருமபுரி மண்டி திரு. க அ. மா. சித்தப்ப செட்டியார் அவர்கள் ரூ. 2000ம் தருவதாக உளமுவந்து கூறியிருக்கின்றனர்.

பெருமக்கள் பலரையும் வாலாஜாபாத்திற்கு ஒருமுறை வருகை புரிய வேண்டுகிறோம். இக்கல்வி நிலையங்களை நேரிற் காண வேண்டுகிறோம். இங்கு நடைபெறும் செயல்கள் தங்கள் உள்ளத்திற்கு நிறைவைத் தந்தால் உதவிபுரிய வேண்டுகிறோம்.

--இந்துமத பாடசாலையார்.

செல்வம் செலவிடத்தான்!

ஆனால்

வாழ்க்கை என்றுமே வசந்தமாயிராது!

★

எதிர்காலத்துக்காக

எறும்பு சேர்த்து வைக்கிறது!

★

வருங்காலத்துக்காக

வண்டு சேர்த்து வைக்கிறது!

★

ஆபத்துக் காலத்துக்காக

அணில் சேர்த்து வைக்கிறது!

★

மனிதன் மட்டும்

வருவதை யெல்லாம் வாரி யிறைக்கலாமா?

இன்றே எதிர்காலத்துக்காகச் சேமியுங்கள்

தேசீய சேமிப்பு பத்திரங்கள்

வாங்குங்கள்.

எல்லா தபாலாபீஸ்களிலும் கிடைக்கின்றன.

விவரங்களுக்கு எழுதவும் :—

மாகாண தேசீய சேமிப்பு அதிகாரி சென்னை—6.

மதராஸ் பென்சில் பாக்டரி



சைத்ரிகன் தனக்கு முதலாக வேண்டியது ஒரு பென்சில் என்பதை அறிவான். வர்ணங்கள் 'பிரஷ்'கள் முதலான ஆடம்பரங்கள் அந்தப் பென்சிலுக்குப் பிறகுதான்.

அழகானபடம் வரைவதற்குத் திறமைகொண்டசைத்ரிகன் தேவை.

ஒரு நல்ல பென்சில்தான் சைத்ரிகனது திறமையை வெளிப்படுத்த முடியும்.

ஸ்டார் ஆப் இந்தியா பென்ஸில்தான் அந்த நல்ல பென்ஸில்!

8-ம் பக்கம் தொடர்ச்சி



1. Mr. I. A. K. Jamal 2. His Excellency U. Ba Gyan, Judicial Minister 3. His Excellency U. Tin, Minister for Finance 4. Mr G. D. Naidu 5. Master G. D. Naidu 6. H. E. Saw San Phe Thin, Minister for White, Karen Affairs 7. Mr San Ohn His Ps. Adviser 8. Mr B. A. Padmanaba Iyer 9. Mr Y. Jamal at "Gopal Bagh", Coimbatore 6-6-1948.

Harbhajanlal, L. Bodhraj, Chandramohan Sahbia
Natarajan Chettiar, Stalin Srinivasan, Swamiji Gurcharandas Mehta, Va. Ra., G. D. Naidu
G. D. Rajagopal
'Gopal Bagh' 30—5—49 Coimbatore

எல்லாரோடும் இனிமையாகப் பழகக்கூடிய பண்புகள் அவரிடம் உண்டு. பர்மாவிலிருந்து இத்தியா வந்த மத்திரி முதலானவர்களுடன் நம் நாயுடு

[49-ம் பக்கம் பார்க்க]

இராமகிருஷ்ண இண்டஸ்டிரியல்ஸ்

பீளமேடு கோயமுத்தூர்

தொழில் வளர்ச்சியில் தென்னிந்தியாவின்
சிறந்த முன்னேற்றம்.

அச்சுக்கூடத்திற்குத் தேவையான:-

பேப்பர் கட்டிங் மெஷின், டிரெடில் மெஷின், டெம்மி சிலிண்டர் மெஷின், டைப் காஸ்டிங் மெஷின், வைர்ஸ்டிச்சிங் மெஷின் ஆகிய மெஷின்களும், சில்க் ட்விஸ்டிங் மெஷின், டெக்ஸ்டைல் மெஷினரி, ஸ்பேர் பார்ட்ஸ் ஆகியவைகளும் ஆர்டரின்பேரில் செய்து தரப்படும்.

ஒருமுறை நேரில் வந்து பாருங்கள்.

'Phone: 2601

T. G. PATHY & Co.,

234, Govindappa Naicken Street,
MADRAS.

(Stockists of all Electrical Materials.)

குறைந்த விலை உயர்ந்த ரக சாமான்கள்

எல்லாவித எலக்டிரிக் சாமான்களும் கிடைக்கும்

ஸ்ரீ கிருஷ்ண ஸ்டோர்ஸ்

நாகரீக ஆடைகள்!

கவர்ச்சி செய்யும் தினுசுகள்!

கல்யாண காலங்களுக்கு வேண்டிய சகலவிதமான, பெங்கால் & பனாரிஸ் சில்க், பிரிண்டட் சாரிகள், சில்க் சர்ட்டிங்குகள், கோயம்புத்தூர், சேலம் '100x8' நவீன பார்டர்கள் அமைந்த காட்டன் சாரிகளும், பட்டுவேஷ்டிகள், பட்டு துப்பட்டாக்கள் மில் வேஷ்டிகள் மில் வாயில் சீட்டி பாப்ளீன் தினுசுகளும் எங்களிடத்தில் சகாயமான விலைக்குக் கிடைக்கும்.

தவறாது ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

26, மேலக்கோபுர வாசல், மதுரை.

உங்கள் மோட்டார் கார்களை

இன்சூரன்சு செய்யுங்கள்!

மிட்லண்டு இன்சூரன்சு கம்பெனி மோட்டார் கார்களை இன்சூர் செய்கிறது. நான் அக்கம்பெனியில் ஏஜண்டாக இருக்கிறேன். உங்கள் கார்களை என் மூலமாக இன்சூர் செய்யுங்கள். அதனால் எனக்குக் கிடைக்கும் கமிஷன் தொகையை இந்துமத பாடசாலைக்கும் வள்ளலார் இல்லத்துக்கும் பயன் படுத்துகிறோம். எனவே என்மூலமாக இன்சூர் செய்து கொள்ளுதலால் இந்து மதபாடசாலையில் படிக்கும் 750 சிறுவர் சிறுமிகட்கும், வள்ளலார் இல்லத்தின் 550 குழந்தைகளுக்கும் உதவி செய்தவராகிறீர்கள்.

தங்கள் கார் இன்சூரன்சு முடிவாகிற தேதியை எனக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன். அல்லது என் பெயரிட்டு மிட்லண்டு கம்பெனிக்கே ஒரு கார்டு எழுத வேண்டுகிறேன். கார் இன்சூரன்சு சம்பந்தமானவைகளை யெல்லாம் அவர்களே செய்து வைப்பார்கள்.

வா. தி. மாசிலாமணி பிரதிநிதி

மிட்லண்டு இன்சூரன்சு கம்பெனி,

13-14 சகிண்டு லைன் பீச்சு, சென்னை.

நாளையதினம் நிச்சயமாக சொல்ல முடியாத சம்பவங்களினின்று நீங்களும் உம்மைச்சார்ந்தவர்களும் முழுவதும் பாதுகாத்துக்கொள்ள இன்றைய உமது பொருட்களை சரியான முறையில் உபயோகியுங்கள். லைப் இன்ஷ்யூரன்ஸில் சிறந்த எல்லாவற்றிற்கும் இணையானதும், இந்தியாவின் மிகப் பெரியதுமான "ஓரியண்டல்" லைப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியின் பாலிஸி வைத்திருந்து பெருமையடையுங்கள்.

அமுலிலுள்ள மொத்த இன்ஷ்யூரன்ஸ்
ரூ. 1,66,09,00,000- க்குமேல்
நிதிகள் ரூ. 48,66,00,000-க்குமேல்

ஒவ்வொருவருக்கும் தேவையான வசீகரமான திட்டங்கள் எம்மிடம் உள்ளன. உமது தேவைக்குச் சரியான பாலிஸியை நாங்கள் சிபார்சு செய்வோம்.

விவரங்களுக்கு எழுதுக:- கிளை காரியதரிசி,

ஓரியண்டல் கவர்ன்மென்ட் ஸெக்யூரிடி லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

(1874ல் இந்தியாவில் இணைக்கப்பட்டது.)

ஓரியண்டல் கட்டிடங்கள் அரண்மனைக்காரத் தெரு, ஜி.டி. சென்னை.

மற்ற கிளை ஆபீஸ்கள்:—

திருச்சி:
நெ. 3 மாக்டொனல்ட்ஸ் ரோட், கண்டோன்மென்ட்.

திருவனந்தபுரம்:
67, 68, மெயின்ரோட்.

மதுரை:
மேலமாசி வீதி.

கோயம்புத்தூர்:
நெ. 8/54, ஜெயில் ரோடு.

விசாகப்பட்டணம்:
மெயின்ரோட்.

பெங்களூர்:
ஓரியண்டல் கட்டிடங்கள், சவுத்பரேட்.

இந்தியா பூராவும் ஏஜண்டுகள் உள்ளனர்.

தலைமை ஆபீஸ்: **பம்பாய்.**



போன்: நெ. 4322

இரும்புப் பெட்டி

ஸ்டீல் அல்மைரா காஷ் பாக்ஸ்

விலை சகாயமாகவும், புது நவீன முறையிலும் சப்ளை செய்யப்படும்.

ம. நாராயணசாமி முதலியார் & சன்ஸ்.,
இரும்புப் பெட்டி வியாபாரம்,



தந்தி: IRONSAFE. : : 58, பிராட்வே, மதராஸ்.

கே. சுவாமிநாதன் & கம்பெனி



மாவு மில்,
நெல் மிஷின்,
சியக்காய் மிஷின்,
காபி மில்,
தண்ணீர் பம்புகள்

முதலியனவும் அவற்றின் ஸ்பேர் சாமான்களும் முதல் தரமான சொந்த தயாரிப்புகள். மற்றும் பெல்டிங்குகள் பேரிங்குகள் முதலிய மில் சம்பந்தமான சாமான்கள் எப்போதும் தயாரில் கிடைக்கும்.

சுவாமிநாதன் & கம்பெனி
24, எர்ரபாலு செட்டி தெரு, சென்னை 1.
தொழிற்சாலை:- 7, வால்டாக்ஸ் ரோட், சென்னை.
பெனிங்டன் ரோட், தஞ்சாவூர்.
70/3, நரஸிம்ம ராஜாரோட், கிராஸ். (ரீகல் டாக்கீஸ் எதிரில்)
பெங்களூர் சிடி.

நெல்லிக்குப்பம் இண்டஸ்ட்ரீஸ்
லிமிடெட்

★

எல்லாவித மின்சார சாமான்களும் விவசாய பம்ப் செட்டுகளும் இங்கே கிடைக்கும்

மின்சார மோட்டார்களை 'ரி-வைண்ட்' செய்வதில் புகழ்பெற்ற நிறுவனம்

தொழிற்சாலைகள்
நெல்லிக்குப்பத்தில்:

வியாபார அலுவலகம்
337, தம்பு செட்டித் தெரு,
சென்னை.

ரிஜிஸ்டர் ஆபீஸ்:
2-c பிஷப் வாலர்ஸ் அவினியூ ஈஸ்ட்
மைலாப்பூர், சென்னை 4.

பிரான்சு ஆபீஸ்:—ஜோதி கிரவுன்ட்ஸ், விழுப்புரம்.

சொந்தத் தறியில் நெய்தவை;
காஞ்சிபுரம் பட்டுப்புடவைகள்

சரிகை, சாயம்,
பார்டர், கலர்,
டிசைன்,
உயர்ந்தவை.

கிடைக்குமிடம்:
சே. ரா. ஆதிநாராயண முதலியார்,
17-ஏ, திருக்கச்சிநம்பித் தெரு, சின்னக் காஞ்சிபுரம்.

கே. டி. ஆர்.
நறுமணப் பண்டகசாலை
விஜயபுரம்.

ஐம்பது ஆண்டுகள்! அரை நூற்றாண்டுகளாக!

எங்கும் எல்லோரும் விரும்பி வாங்கி மகிழும் பன்னீர்!
பல்வகையான உயர்ந்த ஊதுவத்திகள்!
அரைக்கீரைத் தைலம்!
சந்தனாதித் தைலம்!

எல்லாம் நல்ல மூலிகைகள் ★ கை தேர்ந்த பழக்கமுடையவர்களாலே தயாரிக்கப்பெற்றவை

இவை எம்மிடம் என்றும் புதியவை
நறுங்குணமுடையவை.

தேவைக்கு எழுதுங்கள்

பாலிஸிதார்க்குத் திருப்தியளிக்கும் தொண்டு பிரதிநிதிகட்குத் திருப்தியளிக்கும் ஒத்துழைப்பு.

நிறுவப்பட்ட காலமுதல் சென்ற 13 வருஷங்களாக எவ்விதத்திலும் குறைகூற முடியாத சிறந்த தொண்டை தளராமல் பாலிஸிதாரருக்கு மிட்லண்டு புரிந்துகொண்டு வந்துள்ளது.

பாலிஸிதார்கள் கம்பெனியை விரும்புதற்கும் பிரதிநிதிகள் தேடி அடைதற்கும் இதுவே காரணம்.

பிரதிநிதிகளாய்ச் சேர விரும்புவோருக்கு அரிய சந்தர்ப்பம் இது. விவரங்களுக்கு எழுதவும்.

மிட்லண்டு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

தலைமை ஆபீஸ்: சென்னை.

தபால்பெட்டி 1502

13-14, சகிண்டு லைன் பீச், சென்னை.

தி வான்கார்டு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லி-ட்.

தி வான்கார்டு பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லி-ட்.

தலைமை ஆபீஸ்: மதருஸ் 1

எல்லா விதமான இன்ஷ்யூரன்ஸ் வியாபாரம் ஏற்றுக்கொள்ளப்படும் விவரங்களுக்கு எழுதுக.

எச். டி. ராஜா,
ஜெனரல் மானேஜர்.

இந்துமத பாடசாலை வாயிலாக வான்கார்டு கம்பெனியில் பயர் (Fire) இன்சூரன்சு செய்து கொள்ளுங்கள்.

தங்கள் பணிவுள்ள,

வா. தி. மாசிலாமணி.

செ. ரெத்தினசாமி செட்டியார்
தங்கநகை & வெள்ளி வியாபாரம்,
சிதம்பரம்.

நவின வேலைப்பாடமைந்த
வெள்ளி கொலுசுகள்; தங்க
நகைகள், ரெங்கூன் வைர
ஆபரணங்கள்,
உத்திரவாதத்துடன்
எப்பொழுதும் ஏராளமாய்
கிடைக்கும்.

S. R. சீல்
உத்திரவாதமுள்ளது.

புதியரகங்கள்
பட்டு சேலைகள்
2000 டிசைன்கள்.

நூல் சேலைகள்
3000 டிசைன்கள்

மில் ஜவுளிகளில் பல நூறு
டிசைன்கள்

மிகவும்
மலிந்த விலையில் விற்கிறோம்

கஸ்தூரிபாய்
கம்பெனி, சிதம்பரம்.

வி. எஸ். அண்டு சன்ஸ்.

உயர்ந்த வகை
சுத்தமான ரகம்

மார்க்கட்டுகளில் நிகரற்றவை

குழந்தைகளுக்கு இனியதும்

ஆவலும் உண்டாக்குவது

தென் இந்தியா பெப்பர்மெண்ட் தொழிற்சாலை,
ஸ்தாபிதம்: 1925, :: கும்பகோணம்

★ பங்கஜா மில்ஸ் லிமிடெட் ★

(1932-A ரிஜிஸ்டர் செய்யப்பெற்றது.)

ரிஜிஸ்டர் ஆபிஸ்: கோயமுத்தூர்.

கோயமுத்தூரில், பேர்பெற்ற மில்களின் வரிசையில் சேர்ந்த இம்மில் தக்க அநுபவஸ்தர்களால் நிர்வகிக்கப்பெற்று வருகிறது.

★

ஸ்பின்னிங்

80-நெ வரை ரிங்கு நூல்

மற்றும் இதே இனத்தில் டப்ளிங்கும் தயாரிக்கப்படுகிறது.

வருடந்தோறும் பங்குதாரர்கட்கு நல்ல வட்டி தரப்பட்டு வந்துள்ளது.

இந்திய முதல் இந்திய தொழிலாளர் இந்திய நிர்வாகம்	—	ஆக எல்லாம் இந்திய மயமாக நடைபெற்று வருகின்ற தேசீயத் தொழில் ஸ்தாபனம்.

ஆதலால் இந்த மில்நூலை அனைவரும் ஆதரியுங்கள்

Managing Agents and Secretaries:-

C. S. Ratnasabapathi Mudaliar & Sons,

COIMBATORE.

40-ம் பக்கம் தொடர்ச்சி
அவர்கள் நாற்பதாம் பக்கத்திலுள்ள முதற்படத்தில் காட்சி அளிக்கிறார். பிறநாடுகளுக்கு அவர் சென்ற போது அங்குப் பெற்ற விருந்து முதலியவைகளை அந்நாட்டினர் இங்கு வரும் போது அவர்களுக்குச் செய்வதில் மகிழ்கிறார். அவரது வலப்பக் கத்தில் உள்ள சிறுவன் அவரது திருமகன் கோபால்.

ஸ்டாலின் ஜெகதீசன், தயாளுபாகு உரிமையாளர் சுவாமி குருசரன்தாஸ் மேதா, வா. ரா. முதலியவர்கள் கோபால் மாளிகைக்கு வந்தபோது எடுத்தபடம். இடது கோடியில் நாற்காலியிலும், முன் பக்கத்தில் அவரது திருமகன் கோபாலும் இருக்கிறார்கள். (இரண்டாம் படத்தில்)



சென்னை மாகாணக் கவர்னர் சர். ஆர்தர் ஹோப் துரைமகனர் அவர்களும் அவரது மனைவியாரும், திவான்பகதூர் சி. எஸ். இரத்தின சபாபதி முதலியாரும் உயர்திரு. ஜி. டி. நாயுடு அவர்களுடன் சிற்றுண்டி கொள்ளுகிறார்கள்.

உயர்திரு. நாயுடு அவர்களுக்குத் தொழிற்கல்வியில் ஆர்வம் இயற்கையாகவே இருந்தது. தாம் பல தொழில்களில் வல்லவராக ஆனதோடு, பலரும் அவ்வாறு ஆகவேண்டுமென விரும்பினர்; இலட்சக்கணக்கான பணம் செலவிட்டார். ஒரு கல்லூரியும் (Arthur Hope College of Technology) ஒரு தொழிற்சாலையும் (Arthur Hope Polytechnic) கோயமுத்தூரில் தொடங்கினர்.



1. T. S. Venkataraman Iyer, 2. N. Muthukrishnan B.E., 3. M. S. Gopalakrishnan B.E., 4. K. Achuthan Nair B.E., 5. M. K. Ganesan B.E. 6. K. S. Sikhamaniswaran B.Sc., (Hons), 7. Master Viswanath 8. Prof. A. Viswanatha M.Sc. (London) Principal, 9. General K. M. Cariappa, Commander-in-Chief. 10. T. S. Chockalingam, Editor, 'Dinasari', 11. G. D. Naidu. 12. C. G. Ponnappa, 13. Major-General A. A. Rudra, 14. Prof. K. C. Advani B.Sc., (Hons). 15. S. Ponnuswami. 16. T. Somasundaram B.A., 17. Master G. D. Rajagopal 2-4-49.



கல்லூரிக்குப் பெருமக்கள் பலர் வருகை புரிந்திருக்கிறார்கள். இந்திய நாட்டின் படைத்தலைவர் ஜெனரல் கரியப்பா அவர்கள் வந்தார்கள். முன் பக்கத்திலுள்ள முதல் படம் அவர் வந்தபோது எடுக்கப் பெற்றது.

இந்திய அரசாங்கத்தின் வர்த்தக உறுப்பினராயிருந்த சர். ஏ. இராமசாமி முதலியார் அவர்கள் கல்லூரியைப் பார்வையிட்டனர். அவர்கள் வந்தபோது எடுக்கப்பெற்ற படமும் முன்பக்கத்தில் இரண்டாவதாக உள்ளது.



தொழிற்சாலைக்குச் சென்னை கவர்னர் வருகைபுரிந்தபோது எடுக்கப் பெற்றது. கவர்னர் பெருமானுக்குத் திரு. நாயுடு அவர்களிடம் அளவுகடந்த மதிப்புண்டு. பொதுமக்கள் நலத்தில் திரு. நாயுடு அவர்கள் கொண்டிருந்த அக்கரையையும், தொழிற்கல்வியில் அவர் காட்டி வந்த உதவியையும் கவர்னர் பெருமான் அவர்கள் நன்கு உணர்ந்திருந்தார், சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும், ஆந்திர பல்கலைக் கழகத்திற்கும், வேறு பல கல்வி நிலையங்களுக்கும் தாராளமாகப் பொருளுதவி செய்த திரு. நாயுடு அவர்களைச் சர். ஹோப் அவர்கள் இந்தியாவின் நுப்பீல்டு பிரபு (Lord Nuffields of India) என்று பட்டப் பெயரிட்டு அழைத்து மகிழ்ந்தார்கள்.

வாலாஜாபாத் இந்துமதபாடசாலையிடத்தும் உயர்திரு. நாயுடு அவர்களுக்குப் பற்று மிக உண்டு. பாடசாலைக்குத் திரு. நாயுடு அவர்கள் பலவகைகளிலும் உதவி செய்திருக்கிறார்கள்.

சென்ற 1949 மே திங்களில், இந்து மதபாடசாலை யிலிருந்து ஆசிரியர்களும் மாணவர்களுமாக எழுபதுபேர் சுற்றுப்பயணம் செய்தபோது கோயமுத்தூருக்கும் சென்றோம். அங்கு ஒரு வாரத்திற்கு மேல் தங்கினோம். கோயமுத்தூரில் எங்களை வரவேற்று, நாங்கள் தங்குவதற்கும் உண்பதற்கும் யு. எம். எஸ். மாணவர் இல்லத்தில் இடங்கொடுத்து மகிழ்ந்தவர் திரு. ஜி. டி. நாயுடு அவர்கள்.

திரு. நாயுடு அவர்கள் உதவியால் கோயமுத்தூரில் பல இடங்களில் கூட்டங்கள் நடத்தவும், உடற்பயிற்சிகளைக் காட்டவும் முடிந்தது. அவரது நண்பர்கள் பலரும் எங்களைப்பார்த்து எங்கள் பயிற்சிகளைப் பற்றியெல்லாம் தெரிந்து கொண்டு, எங்களை வாழ்த்தவும் முடிந்தது. யாரும் செய்திராத பேருதவியைத் திரு. நாயுடு அவர்கள் எங்களுக்குச் செய்தார் என்றால் மிகையாகாது. அப்பெரியாரும் அவர் ஆற்றிவரும் பேரறங்களும் நெடிது இனிது வாழ்க!



இந்து மதபாடசாலை மாணவர்கள் கோயமுத்தூர் சென்றிருந்த போது எடுக்கப் பெற்ற படம். திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் இடதுபக்கத்தில் கோயமுத்தூர் அரசியலார் கல்லூரித் தலைவர் திரு. ஏ. இராமநாதம் பிள்ளை அவர்களும், அவர்களுக்குப் பக்கத்தில் மாகாணப் பங்கீட்டு அலுவலர் திரு. அநுமந்தராவ் நாயுடு அவர்களும், அவர்களுக்குப் பக்கத்தில் திரு. வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்களும் உட்கார்ந்திருக்கிறார்கள்.

உங்களுடைய தேவைகளுக்கேற்ற
நவீன நூல், பட்டு ஜவுளிகளுக்கு

பீதாம்பர மாளிகை

SILK PARADISE

PALAYAKAT COY., LTD.
MADRAS. MADRAS.

TRADE MARK

"சங்கு மார்க்கு"

கைலிகள் எல்லாவிதத்திலும் நிகரற்றவை.

எங்களிடம் எல்லாவித கைத்தறி ஜவுளி தினுசுகளும்
மில் ஜவுளிகளும் கிடைக்கும்

மதராஸ் பளயகாட் கம்பெனி,
லிமிடெட்,
3-4, அம்மன் சந்நிதி :: மதுரை.

தலைமை ஆபீஸ்: 31, அரண்மனைக்காரன்தெரு, மதராஸ்
கிளைகள்: கொழும்பு, கண்டி & இரங்கூன்.

Printed & Published at Manickam Press, H. R. School, Walajabad,
by W. T. Masilamani, Editor N. P. Thanigai Arasu.